
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 156 சித்திரை 29
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, திங்கள், மே 12, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**காஷ்மீர் பிரச்சனைக்கு தீர்வு காண இந்தியா, பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்றுவோம்: ட்ரம்ப் அறிவிப்பு**
...2-ம் பக்கம்

**தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது: பிரதமர் மோடி பெருமிதம்**
...3-ம் பக்கம்

**முத்தரப்பு மகளிர் கிரிக்கெட்: இலங்கை அணியை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன்**
...6-ம் பக்கம்





அழகர் மலையிலிருந்து தங்கப்பல்லக்கில் புறப்பட்ட கள்ளழகர் மதுரை வந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் மூன்றுமாவடியில் சர்க்கரை கிண்ணத்தில் தீபம் ஏற்றி அழகரை வரவேற்றனர். அங்கு நடந்த எதிர்சேவையில் மக்கள் கூடியிருக்கும் காட்சி. (உள்படம் - கள்ளழகர்)

# மதுரை வந்த கள்ளழகருக்கு பக்தர்கள் உற்சாக வரவேற்பு

## இன்று காலை வைகை ஆற்றில் இறங்குகிறார்

மதுரை, மே 12-

**மதுரை வந்த கள்ளழகருக்கு பக்தர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க கள்ளழகர் கோயிலிருந்து புறப்பட்ட கள்ளழகருக்கு மதுரை மூன்று மாவடியில் கோவிந்தா, கோவிந்தா என கோஷம் எழுப்பி தண்ணீர் பீய்ச்சி அடித்து பக்தர்கள் வரவேற்றனர். இதனை அடுத்து இன்று காலை வைகை ஆற்றில் இறங்குகிறார்.**

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோவில் சித்திரைத் திருவிழா மே 8-ல் தொடங்கி 17-ம் தேதி வரை நடைபெறுகிறது. மூன்றாம் நாளில் சுந்தரராஜபெருமாள் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினார். பின்னர் மாலையில் கொண்டப்ப நாயக்கர் மண்டபத்தில் சுந்தரராஜபெருமாள், மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க கள்ளழகர் திருக்கோலத்தில் தங்கப் பல்லக்கில் எழுந்தருளினார். பின்னர் மாலை 6.15 மணியளவில் கோயிலிலிருந்து கள்ளழகர் மதுரைக்கு புறப்பட்டார். கோவில் ராஜகோபுர வாசலிலுள்ள பதினெட்டாம்படி கருப்பணசாமி சந்நிதியில் தீபாராதனை நடந்தது.

கருப்பணசாமியின் உத்தரவு பெற்று மதுரைக்கு கள்ளழகர் மாலை 6.25 மணியளவில் புறப்பட்டார். பின்பு இரவில் பொய்கைக்கரைப்பட்டி, கள்ளந்திரி பகுதியிலுள்ள மண்டகப்படிகளில் எழுந்தருளி அப்பன்திருப்பதி ஜமீன்தார் மண்டபத்தில் தங்கினார். நான்காம் நாளான நேற்று (மே 11) அதிகாலை 1 மணியளவில் சுந்தரராஜன்பட்டி மறவர் மண்டபத்தில் எழுந்தருளினார். பின்னர் கடச்சனேந்தல் வழியாக மதுரை மாநகர எல்லையான மூன்றுமாவடிக்கு நேற்று அதிகாலை 4 மணியளவில் வந்தடைந்தார். கள்ளழகரை காண திரண்டிருந்த பல ஆயிரம் பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா என கோஷம் எழுப்பியும், தண்ணீர் பீய்ச்சி அடித்தும் கள்ளழகரை வரவேற்றனர்.

பின்னர் புதூர் மாரியம்மன் கோவில், ரிசர்வ் லைன் மாரியம்மன் கோவில், அவுட் போஸ்ட் மாரியம்மன் கோவில், அம்பலகாரர் மண்டகப்படிகளிலும், தனியார் மண்டகபடிகளிலும் எழுந்தருளினார். வழிநெடுகிலும் பக்தர்கள் திரண்டிருந்த கள்ளழகரை வரவேற்றனர். சாலையோரங்களில் நீர், மோர் பந்தல் அமைத்து பக்தர்களுக்கு நீர், மோர் வழங்கப்பட்டது. பல இடங்களில் அன்னதானமும் வழங்கப்பட்டது. வழிநெடுகிலும் திரண்டிருக்கும் லட்சக்கணக்கான பக்தர்களின் வரவேற்போடு, எழுத்தாணிக்காரத்தெரு வீரராகவ பெருமாளும் வெள்ளிக்குதிரை வாகனத்தில் வரவேற்க இன்று அதிகாலை 5.45 மணி முதல் 6.05 மணிக்குள் கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருள்கிறார்.

# அன்னையர் தினம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மே 12

**நாடு முழுவதும் நேற்று (மே 11) அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு, அரசியல் தலைவர்கள், முக்கியப் பிரபலங்கள், பொதுமக்கள் பலரும் அன்னையர் தின வாழ்த்துகளை தெரிவித்தனர்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்னையர் தினத்தை முன்னிட்டு தெரிவித்திருந்த வாழ்த்து செய்தி:

மண்ணுலகின் உயிர்களை எல்லாம் தன்னிலிருந்து ஈன்றெடுத்து, அன்பினால் அரவணைத்து, தாய்மொழியூட்டி, அறிவூட்டி, ஆளாக்கி, அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும் அன்னையர் அனைவருக்கும் அன்னையர் தின வாழ்த்துகள் என்று தெரிவித்திருந்தார்.

### இந்தியா-பாக். போர் நிறுத்தம் எதிரொலி:

# எல்லையில் மெதுவாக திரும்பும் இயல்புநிலை

0புதுடெல்லி, மே 12-

**இந்தியா - பாகிஸ்தான் இடையே நேற்று முன்தினம் மாலை போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் அடுத்த சில மணி நேரங்களில் பாகிஸ்தான் இந்திய எல்லையோர பகுதிகளில் தாக்குதல் நடத்தி அத்துமீறலில் ஈடுபட்டது. இந்நிலையில், நேற்று காலை முதல் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலத்தில் எந்தவித தாக்குதலும் நடைபெறவில்லை என்ற தகவல் களத்தில் இருந்து கிடைத்துள்ளது. இதனால் அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது.**

போர் பதற்றத்தை அடுத்து முன்னெச்சரிக்கை கருதி இந்த மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட தடைகளும் தற்போது திரும்ப பெறப்பட்டுள்ளன. ராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தில் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாடுகளை மாவட்ட நிர்வாகம் இன்று காலையில் திரும்ப பெற்றுள்ளது. இதை மாவட்ட நிர்வாக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

நேற்று (மே 11) காலை முதல் ட்ரோன் தாக்குதல், குண்டு வீச்சு போன்ற எந்தவித தாக்குதலும் இந்தியா - பாகிஸ்தானின் சர்வதேச எல்லை மற்றும் எல்லை கட்டுப்பாட்டு கோட்டருகே உள்ள பகுதிகளில் இல்லை என தகவல் கிடைத்துள்ளது.

இதை மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் போலீஸ் தரப்பு உறுதி செய்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றம் காரணமாக கடந்த 4 நாட்களாக ட்ரோன் தாக்குதல், ஏவுகணை தாக்குதல், குண்டு வீச்சு போன்றவற்றை ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் எதிர்கொண்டன. பாகிஸ்தானின் வான்வழி தாக்குதல் முயற்சியை இந்திய பாதுகாப்பு படை வான் பாதுகாப்பு கவச அமைப்புகள் மூலம் இடைமறித்து அழித்தது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இரவு நேரங்களில் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகும் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் மேற்கொண்டது. அதை சமாளிக்க நேற்று முன்தினம் இரவும் இந்த பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமையான நேற்று காலை முதலே எந்தவித தாக்குதலும் இந்திய எல்லையில் நடைபெறவில்லை என தகவல் கிடைத்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், உதம்பூர், சம்பா, ரஜோரி, ஜம்மு, உரி, அக்னூர், ஸ்ரீநகர், பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ், பதன்கோட், பெரோஸ்பூர் மற்றும் ராஜஸ்தானின் ஜெய்சல்மாரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. அதே நேரத்தில் பாதுகாப்பு படை எதிர் தரப்பின் நடவடிக்கையை கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### 5 நாட்கள் பயணமாக

# இன்று ஊட்டி செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## 15-ம் தேதி மலர் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்

ஊட்டி, மே 12-

**5 நாட்கள் பயணமாக இன்று ஊட்டி செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் வரும் 15-ம் தேதி அங்கு மலர் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.**

**சுற்றுலா பயணிகள்....**

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கவும், கவரவும் மாவட்டம் நிர்வாகம் சார்பில் கோடைக்காலத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது.

**ரோஜா கண்காட்சி...**

கோடை விழாவின் ஒரு பகுதியாக உதகையில் அமைந்துள்ள புகழ்பெற்ற உதகை ரோஜா பூங்காவில் 20-வது ரோஜா கண்காட்சி சனிக்கிழமை தொடங்கியது. இந்தக் கண்காட்சி இன்று (மே 12) வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. இந்த நிலையில், சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பும் 127-வது உதகை மலர்க் கண்காட்சி உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே 15-ம் தேதி முதல் மே 25-ம் தேதி வரை 11 நாள்கள் நடைபெற உள்ளது. இதைத் தொடர்ந்து குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி மே 23, 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதையடுத்து குன்னூர் காட்டேரி பூங்காவில் முதன்முறையாக மலைப் பயிர்கள் கண்காட்சி மே 30, 31 ஜூன் 1 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அடுத்த வாரத்தில் மலர் கண்காட்சிக்கான அனைத்து பணிகளையும் முடிக்க முடிவு செய்து இருப்பதாக பூங்கா நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

**பட்டா வழங்கும்...**

இந்த நிலையில், 5 நாட்கள் பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (திங்கட்கிழமை) ஊட்டி செல்கிறார். இதற்காக இன்று காலை 10 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை செல்லும் முதல்வர், அங்கிருந்து சாலை வழியாக ஊட்டி செல்கிறார்.

அங்கு 15-ம் தேதி மலர் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார். மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார். அதன்படி, பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டாக்களை வழங்குகிறார்.

இதைத் தவிர்த்து தொட்டபெட்டாவில் பழங்குடியின மக்களை சந்தித்து அவர்களுடன் உரையாற்றுகிறார். ஊட்டி பயணத்தை முடித்துக் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் 16-ம் தேதி இரவு அல்லது 17-ம் தேதி காலை சென்னை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அடுத்த வாரம் தமிழகத்தின் முக்கிய அணைகளில் பாதுகாப்பு ஒத்திகை

சென்னை, மே 12-

**தமிழ்நாட்டின் முக்கிய அணைகளில் அடுத்த வாரம் சிவில் பாதுகாப்பு ஒத்திகை நடைபெறும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனையின்படி, தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்கள், அணுமின் நிலையங்கள், விமான நிலையங்கள் மற்றும் அனல்மின் நிலையங்கள் ஆகியவற்றில் சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை கடந்த 07.05.2025 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் 10.05.2025 சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை, வ.ஊ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம், தூத்துக்குடி மாவட்டம் ஆகிய இடங்களில் பிற்பகல் 4 மணி முதல் 5 மணி வரை நடத்தப்பட்டது. இந்த ஒத்திகையின் போது விமான தாக்குதலை எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை குறித்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஒத்திகை போது பாதுகாப்பு, வெளியேற்றம் மற்றும் முதலுதவி தொடர்பான பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணைகள் மற்றும் நீர்த் தேக்கங்களில் அடுத்த வாரத்தில் சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை நடத்தப்படும்.

இப்பயிற்சியின் தொடக்கமாக முழு ஒத்திகைக்கான தயாரிப்புகள், கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்படும். பின்னர், வாரத்தின் 2-வது பாதியில் ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இந்த ஒத்திகை பயிற்சி நேரடியாக நிகழ்த்தப்படும். இந்த ஒத்திகை பயிற்சியினை மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் ஒருங்கிணைந்து நடத்தும்.

இந்த சிவில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இடங்களில் ஆயத்த நிலையினை சரிபார்த்துக் கொள்வதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே ஆகும். மற்ற இடங்களில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் வழக்கம் போல இயங்கும். இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாகிஸ்தான் மீண்டும் தாக்கினால்

# பதிலடி கடுமையாக இருக்கும்

## பிரதமர் நரேந்திரமோடி எச்சரிக்கை

புதுடில்லி, மே 12-

**பாகிஸ்தான் மீண்டும் தாக்குதல் நடத்தினால், பதிலடி நிச்சயம் கடுமையாக இருக்கும் என அமெரிக்க துணை அதிபர் வான்சிடம், பிரதமர் மோடி கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.**

இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த நான்கு நாட்களாக மோதல் நிலவியது. பாகிஸ்தான் அனுப்பிய டுரோன் மற்றும் ஏவுகணைகளை இந்தியா தாக்குதல் நடத்தி அழித்தது. மேலும், அந்நாட்டின் விமான தளங்கள் மீதும் இந்தியா நடத்திய தாக்குதல் காரணமாக, நிலைகுலைந்து போன பாகிஸ்தான், அமெரிக்காவிடம் முறையிட்டது. போர் நிறுத்தம் ஏற்படுத்த வேண்டியது. அதன்படி நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் போர் நிறுத்தம் அமலானதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் டிரம்ப் முதல் நபராக உலகிற்கு அறிவித்தார். அமெரிக்காவின் தீவிர முயற்சியால் இந்த போர் நிறுத்தம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ், பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக அந்நாட்டு நாளிதழ் செய்தி வெளியிட்டு உள்ளது. அப்போது பிரதமர் மோடி, 'ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை. பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால், இந்தியா நிச்சயம் கடுமையான பதிலடி கொடுக்கும். இந்தியாவின் 26 நகரங்கள் மீது பாகிஸ்தான் குறிவைத்தது. இதற்கு இந்தியா கடுமையான பதிலடி கொடுத்தது என தெரிவித்தார்' என அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

# 10 மாவட்டங்களில் 14, 15-ம் தேதிகளில் மழை


சென்னை, மே 12-

**தமிழகத்தில் வரும் மே 14,15ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தென்மேற்கு பருவமழை தெற்கு அந்தமான் கடல், நிகோபார் தீவு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வரும் 13ம் தேதி துவங்கக்கூடும். மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, மே 13ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 10 மாவட்டங்களில் மே 14,15ம் தேதி ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் அடுத்த 5 நாட்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE ↓ -880.47 பாயின்ட் 79,454.47
NSE ↑ -265.80 பாயின்ட் 24,008.00



**தங்கம்**
1 சவரன் ₹72,360
1 கிராம் ₹9,045



**வெள்ளி**
1 கிலோ ₹110,000
1 கிராம் ₹110.00



**டாலர்** ₹85.42



**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண
# இந்தியா, பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்றுவோம்: ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மே 12-**

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா, பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்றுவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தற்போதைய மோதலை நிறுத்த வேண்டிய நேரம் இது என்பதை முழுமையாக அறிந்து புரிந்து கொள்ளும் வலிமை, ஞானம் மற்றும் மன உறுதியைக் கொண்ட இந்தியா மற்றும் பாகிஸ்தானின் வலுவான மற்றும் அசைக்க முடியாத சக்திவாய்ந்த தலைமையைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். பலரின் மரணத்திற்கும் அழிவுக்கும் வழிவகுத்திருக்கக்கூடிய தற்போதைய மோதலை நிறுத்த வேண்டிய நேரம் இது. (மோதல் தொடர்ந்திருந்தால்) மில்லியன் கணக்கான நல்ல மற்றும் அப்பாவி மக்கள் இறந்திருக்கலாம்! உங்கள் துணிச்சலான செயல்களால் உங்கள் மரபு பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மற்றும் வீரதீரமான முடிவை எடுக்க அமெரிக்கா உங்களுக்கு உதவ முடிந்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன். விவாதிக்கப்படாவிட்டாலும், இந்த இரண்டு பெரிய நாடுகளுடனும் வர்த்தகத்தை கணிசமாக அதிகரிக்கப் போகிறேன். அதோடு, "ஆயிரம் ஆண்டுகளுக்குப்" பிறகு, காஷ்மீர் தொடர்பாக ஒரு தீர்வை எட்ட முடியுமா என்பதைப் பார்க்க நான் உங்கள் இருவருடனும் இணைந்து பணியாற்றுவேன். சிறப்பாகச் செயல்பட்டதற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானின் தலைமையை கடவுள் ஆசிர்வதிப்பாராக!!!" என்று தெரிவித்துள்ளார்.

# ஓவல் மாளிகையில் தனக்கு தானே சிலை வைத்த டிரம்ப்

**வாஷிங்டன், மே 12-**



அமெரிக்க அதிபர் டிரம்ப் ஓவல் மாளிகையில் தனக்கு தானே சிலை வைத்துள்ளது பேசு பொருளாகியுள்ளது.

கடந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசி கொண்டிருந்த டிரம்ப் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் நூலிழையில் உயிர் தப்பிய டிரம்ப், அந்த சம்பவத்தை நினைவு கூறும் விதமாக சிலை வைத்துள்ளார். இந்த புகைப்படத்தை வெள்ளை மாளிகை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

# அன்னையர் தினத்தை முன்னிட்டு தலைவர்கள், பிரபலங்கள் வாழ்த்து

**சென்னை, மே 12-**

நாடு முழுவதும் நேற்று (மே 11) அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, அரசியல் தலைவர்கள், முக்கியப் பிரபலங்கள், பொதுமக்கள் பலரும் அன்னையர் தின வாழ்த்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

**பா.ம.க. நிறுவனர் ராமதாஸ்:**

அன்னையர் நமக்கு அளித்த உயிர், அன்பு, கருணை, வாழ்க்கை உள்ளிட்ட அனைத்துக்கும் நன்றி சொல்வதற்கான உன்னத முயற்சி தான் அன்னையர் தினம். ஒவ்வொரு வினாடியும் அன்னையை வணங்கிக் கொண்டு, நன்றிக் கடன் செலுத்திக் கொண்டே இருப்போம். அன்னையர் வாழ்க!

**அ.ம.மு.க. பொதுச் செயலாளர் தினகரன்:**

அதீத அன்புக்கும், அளவற்ற பாசத்திற்கும், அர்ப்பணிப்பு உணர்வுக்கும் சிறந்த அடையாளமாக திகழும் அன்னையர்களை போற்றிக் கொண்டாடும் அன்னையர்களின் தினம் இன்று.

அன்பில் இணையற்றவர்களாக, பண்பில் நிகரற்றவர்களாக, பாசத்தில் ஈடற்றவர்களாக எத்தகைய சவால்களையும், சோதனைகளையும் துணிச்சலுடன் எதிர் கொண்டு வாழும் தெய்வங்களாக வலம் வரும் அன்னையர்கள் அனைவரையும் இந்நாளில் போற்றி வணங்கிடுவோம்.

**பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ்:**

அம்மா என்ற சொல்லுக்கு அன்பு, அர்ப்பணிப்பு, தியாகம், தான் பசித்திருந்து பிள்ளைகளின் பசியாற்றும் பெருந்தன்மை, தம்மை அழித்து பிள்ளைகளுக்கு வெளிச்சமூட்டும் மெழுகுவர்த்தி என அம்மாவுக்கு ஆயிரமாயிரம் வரையறைகள் உண்டு. ஆனால், இவை அனைத்திற்குள்ளும் அடங்காமல் புதிய, புதிய பரிமாணங்களை எடுத்து, அளவில்லாத அன்பை பரிமாறுபவள் தான் அம்மா. உலக அன்னையர் நாளில் அவர்களின் தியாகத்தைப் போற்றுவோம்; அவர்களை என்றென்றும் வணங்குவோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியா, பாக். போர் நிறுத்தம்: புதிய போப் லியோ வரவேற்பு

**வாடிகன், மே 12-**

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு போப் லியோ வரவேற்பு தெரிவித்து உள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக வட அமெரிக்காவை சேர்ந்த கார்டினல் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் போப் 14-ம் லியோ என அழைக்கப்படுவார் என்று கார்டினல்கள் அறிவித்தனர்.

இந்நிலையில், போப் லியோ, புதிய போப்பாக பொறுப்பேற்று கொண்ட பின்னர் முதல் ஞாயிற்று கிழமையான நேற்று பொதுமக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இதில், உலகம் முழுவதும் உள்ள அன்னையருக்கு அன்னையர் தின வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.

உக்ரைன் மற்றும் காசாவில் அமைதி ஏற்பட வேண்டும் என வேண்டுகோளாக கேட்டு கொண்டார். உடனடி போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும், பணய கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அப்போது அவர் வலியுறுத்தினார். போப் பிரான்சிஸ் கூறிய விசயங்களை எதிரொலிக்கும் வகையில் அவர் பேசும்போது, உலக நாடுகளின் மோதல்களை கடுமையாக சாடினார். 3-ம் உலக போருக்கு ஈடாக நாடுகள் மோதி கொள்ளும் சம்பவங்களை கடிந்து கொண்டார்.

இதேபோன்று, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு போப் லியோ வரவேற்பு தெரிவித்து உள்ளார். பேச்சுவார்த்தைகள் நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும் என அவர் நம்பிக்கையையும் வெளியிட்டார். உலகில், அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டி கொள்கிறேன் என்றும் அவர் கூறினார்.

# இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

**மணிலா, மே 12-**

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜெர்மன் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது, வடக்கு சுமத்ராவில் பிஞ்சாய் நகருக்கு 160 கி.மீ. மேற்கே நில நடுக்கம் ஏற்பட்டது. 89 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த அது ரிக்டர் அளவுகோலில் 6.0அலகுகளாகப் பதிவானது என்று தெரிவித்துள்ளது. இருப்பினும் இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை.

மேலும் நிலநடுக்கம் காரணமாக சுனாமி ஏற்படக்கூடும் என்ற அபாய எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. இந்தோனேசியா, புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும், 'நெருப்பு வளையம்' என்று அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தோனேசியா அருகே 2004-ஆம் ஆண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டு இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 2.30 லட்சம் பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது.

### சேலம், சங்ககிரியில் பரபரப்பு:
# வெறிநாய் கடித்து 20க்கும் மேற்பட்டோர் படுகாயம்

**சங்ககிரி, மே 12-**

சேலம் மாவட்டம், சங்ககிரி நகராட்சிக்குள்பட்ட பகுதியில் வெறிநாய் ஒன்று ஞாயிற்றுக்கிழமை திடீரென சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள், நின்று கொண்டிருந்தவர்களை கடித்துவிட்டு சென்றதால் 20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் சங்ககிரி தலைமை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சங்ககிரி நகராட்சிக்குள்பட்ட ஓ.ராமசாமி நகர், பவானி பிரதான சாலை, மத்தாளிகாலனி, பழைய எடப்பாடி சாலை, நகராட்சி சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலையில் நடந்து சென்றவர்கள், நின்று கொண்டிருந்தவர்கள் என 20க்கும் மேற்பட்ட நபர்களை வெறி நாய் ஒன்று கடித்துவிட்டு சென்றுள்ளது.

இதில் காயமடைந்த நகராட்சி துப்பரவு மேற்பார்வையாளர் அழகேசன் (55), விஜயகுமார் (47), குமார் (57), ஸ்ரீனிவாசன் (55) உள்ளிட்ட பலர் சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். தலைமை மருத்துவ அலுவலர் சரவணகுமார் தலைமையிலான மருத்துவர்கள் காயமடைந்தவர்களுக்கு தடுப்பூசியும், குலுக்கோஸும் செலுத்தி வருகின்றனர். காயமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி அறை ஒதுக்கீடு செய்து தலைமை மருத்துவர் கண்காணித்து வருகிறார். அரசு மருத்துவமனையில் 496 நாய்க்கடிமருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து தகவலறிந்து வந்த நகராட்சி ஆணையாளர் எஸ்.சிவரஞ்சனி, நகராட்சி துணைத்தலைவர் ஆர்.வி.அருண்பிரபு, திமுக நகர செயலாளர் கே.எம்.முருகன் ஆகியோர் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். ஒரு வெறி நாய் கடித்து ஒரே சமயத்தில் பலர் காயமடைந்ததால் சங்ககிரி நகராட்சிக்குள்பட்ட பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தெரு நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகராட்சிக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு

**சேலம், மே 12-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது.

மேட்டூர் அணை காவிரி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள ஒரு அணையாகும். இது சேலம் மாவட்டத்தின் மேட்டூர் வட்டத்தின் நிர்வாகத் தலைமையிடமான மேட்டூர் என்னும் ஊரில் கட்டப்பட்டுள்ளதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்வரத்து தற்போது அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, நீர் வரத்து விநாடிக்கு 876 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர் மட்டம் 108.19 அடியாகவும், நீர் இருப்பு 75.86 டி.எம்.சி. ஆகவும் உள்ளது. குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது.

# பேச்சுவார்த்தைக்கு வரும்படி உக்ரைனுக்கு புடின் அழைப்பு

**மாஸ்கோ, மே 12-**


போர் நிறுத்தம் தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தைக்கு வரும்படி உக்ரைனுக்கு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்யா-உக்ரைன் இடையே போர் நடந்து வரும் நிலையில், அதை நிறுத்த உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை 30 நாட்களுக்கு நீட்டிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. ''அமைதியை நோக்கி செல்வதற்கான தீவிர பேச்சுவார்த்தை நடத்த தயார். மே 15ம் தேதி பேச்சுவார்த்தை நடத்தலாம்'' என ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளார்.

இது குறித்து ரஷ்ய அதிபர் புடின் கூறியதாவது: உக்ரைன் உடன் போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போது முடிவு உக்ரைன் அதிகாரிகள் கையில் இருக்கிறது. அவர்கள் தங்கள் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**12-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பொதுச் சேவையில் நாட்டம் செல்லும். சாஸ்திரப் பயிற்சியில் தெளிவு ஏற்படும். இனிய மாற்றங்களும், பயணங்களும் இன்பம் தரும். சாதுர்ய பேச்சால் சகல காரியங்களும் கைகூடும்.

**ரிஷபம்:-** தனவரவு கூடும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். புதிய பணி மாற்றங்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். பெயரும், புகழும் உண்டாகும். புதிய தோழிகள் சந்திப்பு மற்றும் அருகாமை மகிழ்ச்சி அளிக்கும்.

**மிதுனம்:-** குழந்தைகளின் ஆரோக்கியக் குறைவினால் மகிழ்ச்சி குறையும். பணியிடத்தில் தங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது. தொழிலில் சரிவு ஏற்படும். கல்வியில் தடைகள் ஏற்படலாம்..

**கடகம்:-** சுமாரான நாள். குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தைத் தவிருங்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் வெற்றிக்கான படியில் ஏறுங்கள். உடல் சோர்வு ஏற்படலாம்.

**சிம்மம்:-** இன்று உங்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்கும். பயணத்தில் ஆர்வம் ஏற்படும். ஆரோக்கியம் மேம்படும், பதவி உயர்வு ஏற்படலாம். பல வழிகளில் பணம் வரும்.

**கன்னி:-** கல்வியில் உங்கள் திறமைகளை காட்டினாலும் தடைகள் ஏற்படும். எதிர்பார்ப்புக்கு குறைவாக பணவரவு இருக்கும். எடுத்த காரியங்கள் வெற்றி பெறாததால் மனக் குழப்பம் ஏற்படும்.

**துலாம்:-** தொழில் மற்றும் வியாபாரத்தில் ஆதாயம் பெருகும். கற்பனை வளம் பெருகும். இனிய பயண சுகம் கூடும். பலவகையிலும் பணவரவு அதிகரிக்கும். புதிய நண்பர்கள் அமைவர்.

**விருச்சிகம்:-** பணியின் காரணமாக நேரத்துக்கு உண வருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.


**தனுசு:-** நம்பத் தகுந்த அநேக நண்பர்கள் நட்புக் கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலம் இலாபம் அடைவீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**மகரம்:-** தொழில் அல்லது வியாபார மாற்றங்கள் ஏற்படலாம். பொதுச் சேவை ஈடுபாடு ஏற்படும். பெரியவர்களை மதித்து நடப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும்.

**கும்பம்:-** அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். செல்வ நிலை உயரும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். தெய்வ பக்தியும் நம்பிக்கையும் கூடும். நீண்ட அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படலாம்.

**மீனம்:-** சுகக் குறைவு, பெண்களால் பேரிழப்பு ஏற்படும். தன் பணிவின்மையால் பலவழிகளிலும் நஷ்டம் ஏற்படும். உடல் நிலையில் அக்கறை தேவை. பெரியோரையும், அதிகாரிகளையும் மதித்து நடப்பது நல்லது.

# இலங்கையில் பஸ் கவிழ்ந்து விபத்து: 21 பேர் உயிரிழப்பு



**கொழும்பு, மே 12-**

இலங்கையில் 100 மீட்டர் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 21 பேர் பலியானார்கள்.

இலங்கையின் கதிர்காமத்தின் தெற்கு யாத்திரைத் தலத்திலிருந்து வடமேற்கு நகரமான குருநாகலுக்கு 75 பயணிகளை ஏற்றிச் சென்ற மாநில போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து 100 மீட்டர் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக போலீஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 21 பேர் பலியாகினர் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை துணை அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார். மேலும் 30க்கும் மேற்பட்ட பயணிகளும் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இருப்பினும் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என அஞ்சப்படுகிறது. மத்திய மாகாணத்தின் மலைப்பாங்கான கோட்மலே பகுதியில் ஓட்டுநர் பேருந்தை இடதுபுறம் திரும்ப முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

# சொத்துக்களை தானமாக வழங்க பில் கேட்ஸ் முடிவு

**நியூயார்க், மே 12-**

தன்னுடைய சொத்தில் 99 சதவிதத்தை தானமாக வழங்கும் மெகா திட்டத்தை மைக்ரோசாப்ட் இணை நிறுவனரான பில் கேட்ஸ் பகிர்ந்துள்ளார். இதுகுறித்து தன்னுடைய வலைதளத்தில் அவர் கூறியுள்ளதாவது:

என்னுடைய சொத்துக்களை தானமாக வழங்கலாம் என முடிவு செய்த போது, அதை எப்படி செய்வது என்ற கேள்வி எழுந்தது. வழக்கமாக ஒரு புதிய புராஜெக்டை நான் தொடங்கினால் என்ன செய்வேனோ அதையே தான் செய்தேன். அதாவது புத்தகம் வாசித்தேன். பல்வேறு நன்கொடையாளர்கள் மற்றும் அவர்களின் அறக்கட்டளை குறித்து அறிந்து கொண்டேன். அது எனக்கு சில புரிதலை கொடுத்தது.



மேலும், உலகம் முழுவதும் உள்ள சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்ளும் வகையில் சில புத்தகங்களை வாசித்தேன். நான் படித்தவற்றில் மிகச் சிறந்தது என்றால் 1889-ம் ஆண்டு ஆண்ட்ரூ கார்னகி என்பவர் எழுதிய தி காஸ்பல் ஆப் வெல்த் என்ற கட்டுரை தான். செல்வந்தர்கள் தங்கள் சொத்துகளை சமூகத்துக்கு திரும்ப தரும் பொறுப்பு உள்ளது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பணக்காரராக இறக்கும் ஒரு மனிதன், அவமானத்துடன் இறக்கிறான் என அதில் மேற்கோள் காட்டப்பட்டு இருந்தது. நான் இறக்கும் போது மக்கள் என்னை குறித்து பேசுவார்கள். ஆனால், நான் பணக்காரராக இருந்தேன் என யாரும் சொல்ல மாட்டார்கள். நான் பெற்றுள்ள செல்வத்தை கொண்டு மக்களுக்கு உதவ முடியும் என நம்புகிறேன்.

அதனால் ஏற்கெனவே நான் திட்டமிட்டு வைத்ததை காட்டிலும் இப்போது அதை இன்னும் வேகமாக முடிக்க திட்டமிட்டுள்ளேன். அடுத்த 20 ஆண்டுகளில் கேட்ஸ் அறக்கட்டளை மூலம் என்னுடைய சொத்தில் 99 சதவிதத்தை நன்கொடையாக வழங்குவேன்.

2000-வது ஆண்டு இந்த அறக்கட்டளையை நானும் மெலிண்டாவும் தொடங்கிய போது வேறு திட்டம் இருந்தது. இப்போது அது மாறியுள்ளது'' என அவர் கூறியுள்ளார். தற்போது 108 பில்லியன் டாலர்களாக உள்ள அவரது சொத்து மதிப்பு வரும் 2045-ல் 99 சதவிதம் குறைந்து இருக்கும் என கூறியுள்ளார்.

# சி.ஏ. தேர்வுகள் நடைபெறும் தேதி அறிவிப்பு

**சென்னை, மே 12-**

ஒத்திவைக்கப்பட்டுள்ள சி.ஏ. தேர்வுகள் நடைபெறும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

சி.ஏ. தேர்வுகள் மே 16-ம் தேதி தொடங்கி மே 24 வரை நடைபெறுமென அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மே 9 முதல் 14-ம் தேதி வரை நடைபெறவிருந்த பட்டய கணக்காளருக்கான சி.ஏ. தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் தெரிவித்திருந்த நிலையில், மே 16-ம் தேதி சி.ஏ. தேர்வுகள் ஆரம்பமாகின்றன.

**மரம் மனிதனின் உரம்**

# காஸாவில் இஸ்ரேல் தாக்குதல்: பாலஸ்தீனர்கள் 23 பேர் பலி

**காஸா, மே 12-**

காஸா பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குழந்தைகள் உள்பட 23 பாலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர்.

மத்திய காஸா பகுதியில் உள்ள டெய்ர் அல்-பலாவில் கூடாரத்தின் மீது சனிக்கிழமை மாலையில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நான்கு பாலஸ்தீனர்கள் பலியானார்கள். மேலும் பலர் காயமடைந்தனர். முன்னதாக, சனிக்கிழமை காலை காஸா நகரத்தின் சப்ரா பகுதியில் உள்ள கூடாரத்தில் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் ஐந்து பேர் பலியானதாக பாலஸ்தீன செய்தி நிறுவனமான வஃபா தெரிவித்தது.

தம்பதி மற்றும் அவர்களின் மூன்று குழந்தைகள் ஒரு கூடாரத்திற்குள் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது விமானத்தால் குண்டு வீசப்பட்டனர் என்று குடும்ப உறுப்பினர் ஓமர் அபு அல்-காஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். மேலும் இந்த தாக்குதல்கள் எந்த எச்சரிக்கையும் இல்லாமல் நிகழ்த்தப்பட்டதாக குழந்தைகளின் தாத்தா கூறினார்.

காஸா நகரின் துஃபா பகுதியில் நடந்த ட்ரோன் தாக்குதலில் ஆறு பேர் பலியாகினர். இத்துடன் கடந்த 24 மணி நேரத்தில், காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 23 பாலஸ்தீனர்கள் பலியானதாகவும், 124 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது

## பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம்

புதுடெல்லி, மே 12-

தேசிய தொழில்நுட்ப தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், "தேசிய தொழில்நுட்ப தின வாழ்த்துகள்! நமது விஞ்ஞானிகளுக்கும் பெருமை சேர்க்கவும் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கவும், 1998-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொக்ரான் சோதனைகளை நினைவுகூரவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அவை நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையில், குறிப்பாக தன்னம்பிக்கைக்கான நமது தேடலில் ஒரு முக்கிய நிகழ்வாக இருந்தன.

நமது மக்களால் முன்னேறிச் செல்லும் இந்தியாவானது விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் கண்டுபிடிப்பு, பசுமை தொழில்நுட்பம் உட்பட பல தொழில்நுட்பங்களில், பல்வேறு அம்சங்களில் உலகளாவிய முன்னணி நாடாக வளர்ந்து வருகிறது. அறிவியல் ஆராய்ச்சி மூலம் எதிர்கால சந்ததியினருக்கு அதிகாரம் அளிப்பதற்கான எங்கள் செயல்பாடுகளை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். தொழில்நுட்பம் மனிதகுலத்தை மேம்படுத்தட்டும். நமது தேசத்தைப் பாதுகாக்கட்டும். எதிர்கால வளர்ச்சியைத் தூண்டட்டும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அன்னையர் நாள்:

# த.வெ.க.தலைவர் விஜய் வாழ்த்து

சென்னை, மே 12-

அன்னையர் நாளையொட்டி தவெக தலைவர் விஜய் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், அன்பின் மொழியை நம் அனைவருக்கும் அறிமுகம் செய்த அற்புதக் கடவுள். அன்னையின் தூய அன்பிற்கு ஈடு இணை ஏதுமில்லை இவ்வுலகில். தரணி போற்றும் நம் தாய்மார்கள் அனைவருக்கும் என்னுடைய இதயம் கனிந்த அன்னையர் நாள் நல்வாழ்த்துகள்!" என்று அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### லக்னோவில் நிறுவப்பட்டுள்ள

# பிரம்மோஸ் ஏவுகணை வான்வெளி சோதனைக்கூடம் அர்ப்பணிப்பு




புதுதில்லி, மே 12-

லக்னோ நகரில் நிறுவப்பட்டுள்ள 'பிரம்மோஸ் வான்வெளி ஒருங்கிணைப்பு மற்றும் சோதனைக்கூடத்தை' பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு நேற்று (மே 11) அர்ப்பணித்தார். இதன் தொடக்க விழாவில் காணொலி வழியாக அமைச்சர் கலந்து கொண்டார்.

உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் பலர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இந்த உற்பத்தி மையத்தில் ஆண்டுக்கு 100 ஏவுகணைகளை தயார் செய்ய முடியும்.

பிரம்மோஸ் ஏவுகணை என்பது இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் கூட்டு தயாரிப்பு. இரு நாட்டு ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் இணைந்து பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனத்தை உருவாக்கி இந்த ஏவுகணையை உற்பத்தி செய்கிறது. இந்த ஏவுகணைக்கு, இந்தியாவில் உள்ள பிரம்மபுத்திரா, ரஷ்யாவின் மஸ்க்வா நதிகளின் பெயர்களை இணைத்து, பிரம்மோஸ் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தற்போது இந்தியா பயன்படுத்தி வரும் இந்த ஏவுகணைகளை பிலிப்பைன்ஸ், பிரேசில், வியட்நாம், இந்தோனேசியா ஆகிய நாடுகள் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தங்கள் செய்துள்ளன. புரூனே, சிலி, எகிப்து, மலேசியா, ஓமன், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் ஏவுகணையை வாங்குவதற்கு ஆர்வம் காட்டி உள்ளன.

இதனால் தான் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது. அதன்படி உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பிரம்மோஸ் ஏவுகணையை உற்பத்தி செய்ய, ரூ.300 கோடியில், 1,600 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஆலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த உற்பத்தி ஆலை இன்று திறக்கப்பட்டது. இங்கு ஆண்டுக்கு 100 ஏவுகணைகளை தயார் செய்ய முடியும்.

இது குறித்து மத்திய பாதுகாப்பு துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ரூ.300 கோடியில் பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தி ஆலை திறக்கப்பட்டுள்ளது. இது தன்னிறைவு பெற்ற பாதுகாப்பு உற்பத்திக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. இதில் ஏவுகணை உற்பத்தி மட்டுமல்ல, சோதனை செய்யவும் முடியும். இது பாதுகாப்பு துறையின் தன்னிறைவு வளர்ச்சியை எடுத்துரைக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆலை அமைக்க 2021ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

### பிரம்மோஸ் ஏவுகணை சிறப்புகள்:

**1) 290 முதல் 400 கி.மீ. தொலைவுக்கு சென்று தாக்கும் திறன் பெற்றது.**

**2) அதிகபட்சமாக 650 கி.மீ வரை சென்று தாக்கும் திறன் கொண்டது.**

**3) கப்பல்கள், நீர்மூழ்கிகள், விமானங்கள், நிலத்தில் இருந்து ஏவ முடியும்.**

**4) நம் ராணுவத்தின் முப்படைகளிலும் பிரம்மோஸ் செயல்பாட்டில் உள்ளது.**

**5) இந்த ஏவுகணையை பயன்படுத்தி பலமுனை தாக்குதல் நடத்த முடியும்.**

# ஆபரேஷன் சிந்தூர் இந்திய ராணுவ உறுதியின் சின்னம்

## மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் பேச்சு

லக்னோ, மே 12-

ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் அரசியல், சமூக மற்றும் ராணுவ மன உறுதியின் சின்னம் என்று பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் பிரமோஸ் விண்வெளி ஒருங்கிணைப்பு மற்றும் சோதனை வசதிகளை காணொலி காட்சி மூலம் பாதுகாப்புத்துறை அமைச்சர் திறந்து வைத்தார். அந்த விழாவில் பேசிய அமைச்சர் கூறியதாவது: இந்தியாவுக்கு எதிராக இருந்தவர்களையும், நமது நாட்டைத் தாக்கி பல ஆயிரம் குடும்பங்களை அழித்த பயங்கரவாதிகளையும் ஆபரேஷன் சிந்தூர் மூலம் நமது ராணுவம் நீதியின் முன் நிறுத்தியிருக்கிறது. ஒட்டுமொத்த தேசமும் இன்று நமது ராணுவத்தின் துணிச்சலை போற்றுகிறது.

ஆபரேஷன் சிந்தூர் வெறும் ராணுவ நடவடிக்கை மட்டுமில்லை. அது, இந்தியாவின் அரசியல், சமூகம் மற்றும் ராணுவ மன உறுதியின் சின்னம். இந்த நடவடிக்கை, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் உறுதியையும், ராணுவ வலிமையையும் எடுத்துரைத்திருக்கிறது. பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்தி உரிய பதிலடியை கொடுத்தோம்.

இந்தியாவுக்குள் பயங்கரவாத தாக்குதல் நடத்தினால் என்ன நடக்கும் என்பதை உலகமே பார்த்தது. பயங்கரவாதத்துக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையைப் பின்பற்றி, இது புதிய இந்தியா என்றும், எல்லைக்குள் மற்றும் எல்லைக்கு அப்பால் என பயங்கரவாதத்துக்கு எதிராக பயனுள்ள நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறு ராஜ்நாத் சிங் பேசினார்.

# ஜம்மு காஷ்மீர், பஞ்சாபில் இயல்பு நிலை திரும்பியது

புதுடெல்லி, மே 12-

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் மாநிலத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றம் காரணமாக கடந்த 4 நாட்களாக ட்ரோன் தாக்குதல், ஏவுகணை தாக்குதல், குண்டு வீச்சு போன்றவற்றை ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் எதிர்கொண்டன. பாகிஸ்தானின் வான்வழி தாக்குதல் முயற்சியை இந்திய பாதுகாப்பு படை வான் பாதுகாப்பு கவச அமைப்புகள் மூலம் இடைமறித்து அழித்தது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இரவு நேரங்களில் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகும் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் மேற்கொண்டது. அதை சமாளிக்க நேற்று இரவும் இந்த பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதலே எந்த வித தாக்குதலும் இந்திய எல்லையில் நடைபெறவில்லை என தகவல் கிடைத்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், உதம்பூர், சம்பா, ரஜோரி, ஜம்மு, உரி, அக்னூர், ஸ்ரீநகர், பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ், பதன்கோட், பெரோஸ்பூர் மற்றும் ராஜஸ்தானின் ஜெய்சல்மாரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. அதே நேரத்தில் பாதுகாப்பு படை எதிர் தரப்பின் நடவடிக்கையை கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடிக்கு காங். மூத்த தலைவர் ப.சிதம்பரம் பாராட்டு

புதுடெல்லி, மே 12-

போர் நிறுத்தம் குறித்து எடுக்கப்பட்டுள்ள முடிவு புத்திசாலித்தனமானது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 4 நாட்களாக நீடித்து வந்த போர்பதற்றம் முடிவுக்கு வந்ததுள்ளது. எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்த முயற்சித்த பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இதனால், இருநாடுகளுக்கும் இடையே போர்மேகம் சூழந்தது. மோதல் ஒருபக்கம் நடந்து வந்த நேரத்தில் பாகிஸ்தானின் ராணுவ உயர் அதிகாரிகள், இந்திய ராணுவ உயர் அதிகாரிகளுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தனர்.

இதையடுத்து இருநாட்டு முக்கிய அதிகாரிகளும் தொலைபேசியில் தொடர்ந்து பேசினர். பின்னர் சிறித்து நேரத்தில் போர் நிறுத்தம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னரும் பாகிஸ்தான் எல்லையில் சில மணி நேரம் அடாவடி செயலில் ஈடுபட்டது. இந்தியா இதனை தக்க பதிலடியுடன் முறியடித்தது. இரவுக்கு பிறகு பாகிஸ்தான் தரப்பில் இருந்து தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை என்று தகவல்கள் கூறுகின்றன். இதனால், தற்போது ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இயல்பு நிலை திரும்பியுள்ளது.

இந்த நிலையில், பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ப.சிதம்பரம் கூறுகையில், உயிரிழப்புகள் மேலும் ஏற்படாமல் தடுப்பதற்கு தேவையான மற்றும் அறிவார்ந்த நடவடிக்கை'' என்று பிரதமர் மோடிக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

### தாய்மையின் மகத்துவத்தை போற்றுவோம்:

# இ.பி.எஸ். அன்னையர் தின வாழ்த்து

சென்னை, மே 12-

தாய்மையின் மகத்துவத்தை போற்றுவோம் என எடப்பாடி பழனிசாமி அன்னையர் தின வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், அன்பின் முழு வடிவமாகவும், தியாகத்தின் முழு உருவமாகவும், பிரபஞ்சத்தின் வாழ்வை அழகாய்; அர்த்தமாய் மாற்றிடும் உயிரும் மெய்யுமான ஒப்பற்ற அன்னையின் மகத்துவத்தை போற்றுவதோடு உயிருக்குள் உயிர் கொடுத்து உதிரத்தை உணவாக்கி உலகத்தை உனதென தந்த உன்னத அன்னையர் அனைவருக்கும் "அன்னையர் தினம்" வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

அன்பின் முழு வடிவமாகவும், தியாகத்தின் முழு உருவமாகவும், பிரபஞ்சத்தின் வாழ்வை அழகாய்; அர்த்தமாய் மாற்றிடும் உயிரும் மெய்யுமான ஒப்பற்ற அன்னையின் மகத்துவத்தை போற்றுவதோடு உயிருக்குள் உயிர் கொடுத்து உதிரத்தை உணவாக்கி உலகத்தை உனதென தந்த உன்னத அன்னையர் அனைவருக்கும் "அன்னையர் தினம்"

# தீவிரவாதத்துக்கு அதன் பாஷையில் பதில்: உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் பேச்சு

லக்னோ, மே 12-

தீவிரவாதத்துக்கு அதன் பாஷையில் பதில் கொடுக்க வேண்டும். அதற்கான மெசேஜை ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகத்துக்கு இந்தியா சொல்லியுள்ளது'' என யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

லக்னோ நகரில் நடைபெற்ற பிரம்மோஸ் ஏவுகணை தயாரிப்பு மைய திறப்பு விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டு, பிரம்மோஸ் ஏவுகணை தயாரிப்பு மையத்தை திறந்து வைத்தார். அப்போது யோகி ஆதித்யநாத் பேசுகையில், தீவிரவாதத்தை அழிக்க வேண்டிய நேரம் இது. அதை செய்ய பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் ஒட்டுமொத்த தேசமும் ஒன்றுபட வேண்டும். பிரம்மோஸ் ஏவுகணை என்றால் என்ன என்பதை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது அதன் கிளிம்ப்ஸை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அதை பார்க்காதவர்கள் பிரம்மோஸ் ஏவுகணையின் வலிமை குறித்து பாகிஸ்தானியர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

எந்தவொரு தீவிரவாத செயலும் தேசத்துக்கு எதிரான போராகக் கருதப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார். தீவிரவாதத்தை முற்றிலுமாக அழிக்கும் வரை, இந்தப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் இருக்காது. தீவிரவாதத்துக்கு அதன் பாஷையில் பதில் கொடுக்க வேண்டும்.

அதற்கான மெசேஜை ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகத்துக்கு இந்தியா சொல்லியுள்ளது'' என யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

### பயங்கரவாதிகள் முகாம்களை அழித்த

# இந்திய ராணுவத்திற்கு நடிகர் ரஜினி பாராட்டு

சென்னை, மே 12-

பாகிஸ்தானிற்குள் நுழைந்து பயங்கரவாதிகள் முகாம்களை அழித்த இந்திய ராணுவத்திற்கு நடிகர் ரஜினிகாந்த் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜெயிலர் 2 படப்பிடிப்பிற்காக கேரள மாநிலம் செல்வதற்காக நடிகர் ரஜினிகாந்த் சென்னை விமான நிலையம் நேற்று வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தானிற்குள் நுழைந்து அங்கிருந்த பயங்கரவாதிகள் முகாம்களை அழித்த இந்திய ராணுவத்திற்கு பாராட்டுகள். போரை திறமையாக, வலிமையாக கையாண்ட பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படை அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள், நன்றி. இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

ரஜினிகாந்த் நடித்து வரும் ஜெயிலர் 2 படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அண்மையில் இதன் படப்பிடிப்பு கோவையில் நடைபெற்ற நிலையில் தற்போது கேரளத்தில் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்காண்டு கால ஆட்சியில் தி.மு.க. மக்களுக்கு எதையும் செய்யவில்லை

## கே.பி.முனுசாமி குற்றச்சாட்டு



கிருஷ்ணகிரி, மே 12-

நான்காண்டு கால ஆட்சியில் தி.மு.க. எதையும் செய்யவில்லை என்று அ.தி.மு.க. துணை பொது செயலாளர் கே.பி.முனுசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ். பிறந்த நாளை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் கிருஷ்ணகிரியில் ரத்ததான முகாம் நடைபெற்றது. இதனை தொடங்கி வைத்த முனுசாமி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், தி.மு.க. ஆட்சியின் 4 ஆண்டுக்காலத்தில் எதையும் செய்யவில்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியில் என்ன செய்துள்ளார்கள் என்பதை குறிப்பிட்டு எதுவும் சொல்ல முடியாது. ஆனால் நான்காண்டு ஆட்சி செய்த இ.பி.எஸ்., கிருஷ்ணகிரியில் ரூ.300 கோடி மதிப்பில் தென்பெண்ணை ஆற்றின் நீரை ஏரிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் எண்ணேகொள் கால்வாய் திட்டம், அலியாளம் கால்வாய் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் முடங்கியுள்ளது. இதே போல், சுமார் 10 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒசூரில் ரூ.21 கோடி மதிப்பில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கப்பட்டது.

சாதி, மதவாத சக்திகளோடு ஒரு போதும் தேர்தல் கூட்டணி கிடையாது எனக் கூறும் திருமாவளவன், தி.மு.க.வின் கொள்கையோடு முழுமையாக ஒத்துப் போகிறாரா அல்லது கூட்டணிக்காக சேர்ந்து இருக்கிறோம் என சொல்கிறாரா என்பதை தெளிவுப்படுத்த வேண்டும்'' என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ., தமிழ்செல்வம் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மனோரஞ்சிதம், முனிவெங்கட்டப்பன், ஜெ.பேரவை மாவட்ட செயலாளர் கே.ஆர்.சி. தங்கமுத்து, நகர செயலாளர் கேசவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய பாதுகாப்பு நிதிக்கு இளையராஜா நன்கொடை

சென்னை, மே 12-

இசை அமைப்பாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜா, தனது ஒரு மாத சம்பளத்தைத் தேசிய பாதுகாப்பு நிதிக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளார்.

காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த மாதம் 22-ம் தேதி, 26 சுற்றுலாப் பயணிகளை பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இந்த தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஒன்பது தீவிரவாத முகாம்களை இந்திய ராணுவம் அழித்தது. இதனால் எல்லையில் போர் பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இசை அமைப்பாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜா, தனது ஒரு மாத சம்பளத்தைத் தேசிய பாதுகாப்பு நிதிக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளார். இது பற்றி தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டதற்கு எதிராக, நமது உண்மையான ஹீரோக்கள், எல்லைகளில் துணிச்சலுடன் செயல்படுவார்கள் என்பதை அறியாமலே, இந்த ஆண்டின் தொடக்கத்தில், எனது முதல் சிம்பொனிக்கு 'வேலியன்ட் (Valiant தைரியத்தையும் துணிச்சலையும் குறிக்கும் சொல்) என்று பெயரிட்டிருக்கிறேன்.

பெருமைமிக்க இந்தியனாகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், தீவிரவாதத்தை ஒழிக்கவும், நமது எல்லைகளையும் மக்களையும் பாதுகாக்க வும் நம் ஹீரோக்களின் துணிச்சலான முயற்சிகளுக்காக எனது இசை நிகழ்ச்சி கட்டணம், மற்றும் ஒரு மாத சம்பளத்தை 'தேசிய பாதுகாப்பு நிதி'க்கு வழங்க முடிவு செய்துள்ளேன். ஜெய்ஹிந்த்'' என குறிப்பிட்டுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மணிப்பூரில் 11 தீவிரவாதிகள் கைது

இம்பால், மே 12-

மணிப்பூரில் உள்ளூர் மக்களை மிரட்டி பணம் பறித்த குற்றச்சாட்டில் 11 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்பால் மேற்கு, காக்சிங், பிஷ்ணுபூர் மற்றும் தௌபல் மாவட்டங்களில் இருந்து அவர்கள் கைது செய்யப்பட்டதாக போலீஸார் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் கைது செய்யப்பட்டவர்களில் தடைசெய்யப்பட்ட காங்லீபாக் கம்யூனிஸ்ட் கட்சியின் (எம்சி முற்போக்கு) நான்கு பேர் அடங்குவர். அவர்களிடம் இருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், 27 தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

### வழக்கம் போல செயல்படுகிறது:

# டெல்லி சர்வதேச விமான நிலையம் அறிவிப்பு

புதுடெல்லி, மே 12-

டெல்லி சர்வதேச விமானநிலையம் வழக்கம் போல இயல்பாக செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பாகிஸ்தான் இடையேயான பதற்றத்தால் அமல்படுத்தப்பட்ட மேம்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகள் இன்னும் விமானநிலையத்தில் அமலில் உள்ளன. டெல்லி சர்வதேச விமானநிலையம் லிமிட் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "டெல்லி விமானநிலையம் வழக்கம் போல செயல்படுகிறது. என்றாலும் வான்வெளி இயக்கப்பாதை மாற்றம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகள் காரணமாக சில விமானங்களின் அட்டவணை மற்றும் நேரம் பாதிக்கப்படலாம்'' என்று தெரிவித்துள்ளது.

அதேபோல், பாதுகாப்புச் சோதனைகளுக்கு கூடுதல் நேரம் ஒதுக்கி, சீரான சேவைகள் வழங்குதற்காக விமான நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கு ஒத்துழைக்குமாறு பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வழக்கமாக நாளொன்றுக்கு சுமார் 1,300 விமான இயக்கங்களை டெல்லி விமானநிலையம் கையாளுகிறது என்பது குறிப்பிடத்தகது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் ராஜதந்திரமான முடிவுகளும், நமது முப்படைகளின் தேசப்பற்றும் இந்தியாவின் பக்கம் தர்மத்தையும், வெற்றியையும் கொடுத்திருக்கிறது. இந்த விவகாரத்தில் இந்தியர்கள் ஒத்த கருத்தோடு துணை நின்றால் மத்திய அரசுக்கு கூடுதல் பலம் கிடைக்கும்.

- ஜி.கே.வாசன்



காஷ்மீர் பிரச்சினை கடந்த 1947 அக்.22-ல் தொடங்கியது. 78 ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திர காஷ்மீரை பாகிஸ்தான் ஆக்கிரமித்த போது அது உருவானது. அமெரிக்காவில் உள்ள யாராவது அவர்களது அதிபர் ட்ரம்புக்கு காஷ்மீர் பிரச்சினை 1,000 ஆண்டுகால பிரச்சினை இல்லை என்று தீவிரமாக எடுத்துரைத்தால் நன்றாக இருக்கும்.

- மணிஷ் திவாரி



இந்தியை எதிர்த்தால் கல்விக்கான நிதி இல்லை என்பதெல்லாம் மாபெரும் தவறுகள். இதையெல்லாம் சுட்டிக்காட்டி செயல்படுவதால்தான் இந்தியாவில் ஸ்டாலின் ஒரு முன்மாதிரி முதலமைச்சராகக் கருதப்படுகிறார். எனவே, வரும் சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணிக்காக தைரியமாக வாக்குக் கேட்போம்.

- டி.ராஜா



இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு நடுநிலை முடிவு என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ குறிப்பிட்டது பல கேள்விகளை எழுப்புகிறது. சிம்லா ஒப்பந்தத்தை நாம் கைவிட்டுவிட்டோமா? மூன்றாம் தரப்பு மத்தியஸ்திற்கான கதவுகளைத் திறந்துவிட்டோமா?

- ஜெய்ராம் ரமேஷ்

# மயிலாடுதுறை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம்

## ஆர்.சுதா எம்.பி தலைமையில் நடைபெற்றது




**மயிலாடுதுறை,மே.12-**

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவர்.ஆர்.சுதா தலைமையில், கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மாநகராட்சி, நகராட்சி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சமூக பாதுகாப்பு திட்டம், மாவட்ட இ-சேவை மையம், நில அளவை, சுகாதார நலப்பணிகள், பள்ளி கல்வித்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், சத்துணவு, புவியியல் மற்றும் சுரங்கங்கள் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மாவட்ட தொழில் மையம், மாவட்ட திறன் பயிற்சி நிறுவனம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், சமூக நல அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், செயல்படுத்தப்படும் மத்திய அரசின் நிதி சார்ந்த திட்டத்தின் கீழ் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம், தேசிய ஊரக குடிநீர் வழங்கும் திட்டம், ஜல்ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்கம், தேசிய சமூக பாதுகாப்புத் திட்டம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி அவாஸ் யோஜனா, தீனதயாள் அந்தோதயாயோஜனா, பிரதமந்திரி கிராம சாலைகள் திட்டம், பாராளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டம், அழகிய நகரமயமாக்கல் பணி, உட்கட்டமைப்பு தொடர்பான பணிகள் - தொலை தொடர்பு, அஞ்சல் துறை, ரயில்வே, நெடுஞ்சாலை, சுகம்யா பாரத் அபியான் உள்ளிட்ட பல்வேறு திட்ட செயலாக்கங்கள் குறித்து, கண்காணிப்புக் குழுவின் தலைவரான மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்; ஆய்வு செய்தார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவர்.ஆர்.சுதா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நடத்தப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தின் வளர்ச்சியை குறித்த விஷயங்கள் விவாதிக்கப்பட்டது. மாவட்டத்தின் வளர்ச்சிக்காக செய்யப்பட்ட மத்திய மாநில அரசாங்கத்தின் திட்டங்கள் எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கண்காணிக்கும் விதமாக அனைத்து துறையினரும் கலந்து கொண்டனர். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வருங்காலத்தில் எந்த மாதிரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. நீட் தேர்விற்கு அடுத்த வருடம் இங்கு சென்டர் அமைக்க கோரிக்கை விடுத்துள்ளனர் அது பற்றியும் பேசப்பட்டது. விவசாயிகளுக்கு தரப்பட்டு வரும் இன்சூரன்ஸ் தொகை பற்றியும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க உள்ளோம். நமது நாடும் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. தேசத்தின் பெருமையை காப்பாற்ற வேண்டிய இடத்தில் நாம் உள்ளோம். நம் நாட்டில் 28 உயிர்களை இழந்துள்ளோம். அதை எதிர்த்து நம் நாடே ராணுவ வீரர்களுக்கு துணையாக நிற்கின்றோம். குறிப்பாக நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மக்கள் அனைவரும் நம் இந்திய ராணுவம் வெற்றி பெற வேண்டும் வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டும். அதேபோன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் மீனவ சமுதாய மக்கள் அதிகம் உள்ளனர். மீன்பிடி தொழிலை நம்பி உள்ள மக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசானது பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்; ; செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொரு திட்டத்தின் கீழ் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது, எவ்வளவு மக்கள் பயன்பெற்றுள்ளனர், திட்டத்திற்கான இலக்கீடு எவ்வளவு, அதில் தற்போதுவரை இலக்கீடு எவ்வளவு எய்தப்பட்டுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்தார். இக்கூட்டத்தில், மக்கள் பிரதிநிதிகள் அவர்களது பகுதியில் உள்ள தேவைகள் குறித்து கண்காணிப்புக் குழு தலைவரிடம் தெரிவித்தனர். மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், திட்டப்பணிகளை தரமாகவும் விரைந்து செயல்படுத்திடவும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) முகம்மதுஷபீர் ஆலம் மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஷ்வரி மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் செல்வராஜ், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதா, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி தலைவர் பூங்கொடி, மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் நகராட்சி பழைய தஞ்சை சாலையில் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்



**திருவாரூர்,மே.12-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவாரூர் நகராட்சி வார்டு எண்.25 பழைய தஞ்சை சாலையில் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்' நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா , கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவாரூர் நகராட்சி வார்டு எண்.25 பழைய தஞ்சை சாலையில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் தரை தளத்தில் 176 கடைகள், முதல் தளத்தில் 48 கடைகள், இரண்டாம் தளத்தில் 7 கடைகளும் என 231 கடைகளுடன் புதியதாக கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்' இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது...

திருவாரூர் என்பது எங்களையெல்லாம் உருவாக்கிய முன்னாள் முதல்வர் டாக்டர்.கலைஞர் பிறந்த மண். திருவாரூர் மாவட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனுக்குடன் செய்து தந்தவர் முன்னாள் முதல்வர் டாக்டர்.கலைஞர் . டாக்டர்.கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தற்பொழுதுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலனுக்கான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

நான்காண்டில், திருவாரூர் மாவட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில், நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் 18 பணிகளும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.54 லட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேமம்பாட்டு திட்டத்தின் கீழ் 43 பணிகள் (10.142 கி.மீ,) ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (10.027 கி.மீ.) 37 பணிகள் ரூ.4.35 கோடி மதிப்பீட்டிலும், 15வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் 57 பணிகள் ரூ.9.30 கோடி மதிப்பீட்டிலும், மாநில நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.66 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.2.21 கோடி மதிப்பீட்டிலும், இயக்குதல் மற்றும்

பராமரித்தல் நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.0.17 கோடி மதிப்பீட்டிலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2 பணிகள் ரூ.1.85 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில், 7 பணிகளும் முடிவுற்றுள்ளது.

அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.78.15 கோடி மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 பணிகள் ரூ.24.16 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.4.06 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச்சாக்கடை திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.29.46 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.1.99 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்றுவருகிறது. மேலும், 2025-2026ஆம் நிதி ஆண்டிற்கு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2025-2026இன் கீழ் நகராட்சிக் குட்பட்ட 86 எண்ணிக்கை சாலைகளை ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026இன் கீழ் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் குளங்கள் மேம்பாடு, ரூ.0.77 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாடு, ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெறவுள்ளது. திருவாரூர் நகராட்சிக்கு மட்டுமின்றி, மன்னார்குடி நகராட்சியிலும் நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் நகராட்சியில் ரூ.16.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் பழைய பேருந்து நிலைய மேம்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டார்கள். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா , கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் சௌம்யா, திருவாரூர் நகர்மன்றத்தலைவர் புவனப்பிரியா செந்தில், பணிநியமன குழு உறுப்பினர் பிரகாஷ், திருவாரூர் நகர்மன்ற துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், நகராட்சி ஆணையர் தாமோதரன், வட்டாட்சியர் சரவணன் உள்ளிட்ட அரசு அலுலவர்கள், அனைத்து நகர்மன்றத்தலைவர்கள், அனைத்து நகராட்சி ஆணையர்கள், திருவாரூர் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# மயிலாடுதுறை அருகே 54 அடி உயர லிங்கம் பிரதிஷ்டை



**மயிலாடுதுறை,மே.12-**

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா பெருஞ்சேரி கிராமத்தில், தாருகாவனத்து சித்தர் பீடம் அமைந்துள்ளது. புராண காலத்தில் தாருகா வனத்து முனிவர்கள் ஏவிய யானையை சிவபெருமான் அழித்து ஆடையாக உடுத்துக் கொண்டதாக வழுவூர் தலபுராணம் தெரிவிக்கின்றது. புகழ் பெற்ற இந்த ஊரில் 54அடி உயரம் 54அடி நீளம் கொண்ட ஆசியாவிலேயே மிகப்பெரிய சிவலிங்கம் தாருகா வனத்து சித்தர் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பிராணப்பிரதிஷ்டை கும்பாபிஷேக விழா நடைபெற்றது. சித்தர் பீடத்தில் நிர்வாகி தட்சிணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பிராண பிரதிஷ்டை விழாவை முன்னிட்டு வாஸ்து சாந்தி பூஜைகள், வசுத்ததார, நவகிரக ஹோமங்கள் இரண்டு கால யாகசாலை பூஜைகள் நேற்று துவங்கின. யாக சாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீர் மேள, தாளங்கள் முழங்க ஊர்வலமாக 62 அடி உயர லிங்க உச்சிக்கு எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து வேதியர்கள் மந்திரம் ஓதி புனித நீர் ஊற்றி பிராண பிரதிஷ்டை கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து கருவறை தாருகாவனேஸ்வரர் சிவலிங்கத்திற்கு மகா அபிஷேகம் செய்யப்பட்டது. கும்பாபிஷேகத்தில் ரஷ்யாவில் இருந்து வருகை தந்துள்ள யூலியா என்ற பெண்மணி ஒருங்கிணைப்பில், கஜகஸ்தான் லித்திவியா, ஜெர்மன் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த 40 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். இதில் கைலாய வாத்தியம் இசைக்கப்பட்ட பொழுது வெளிநாட்டவர்கள் பக்தி பெருக்குடன் நடனமாடி வழிபாடு செய்தனர்.

# பாபநாசம் அருகே நல்லூரில் 1,000 மாணவிகள் பரதநாட்டியம் ஆடி அசத்தல்



**வலங்கைமான்,மே.12-**

வலங்கைமான்அருகே உள்ள நல்லூரில் கல்யாண சுந்தரர் கோவில் தேவாரம் பாடல் பெற்ற திருநாவுக்கரசு நாயனார் அவர்களின் குருபூஜை முன்னிட்டு மனித வளம் மற்றும் சுற்றுச்சூழல்வளர்ச்சி அறக்கட்டளை ,அமுதன் விளம்பர நிறுவனம் ஆகிய இணைந்து நடத்தும் நேற்று திருநங்கை பரதக் கலைஞர் ராஜகுமாரி தலைமையில் 1000 பரதநாட்டியக் கலைஞர்கள் பங்கேற்ற நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திருவாடுதுறை ஆதீனம் கட்டளை வேலப்ப தம்பிரான்,துலாவூர் ஆதீனம் இளவல்,திருநெல்வேலி உமையொரு பாகின் தம்பிரான்,நாச்சியார் கோவில் இளவரசர், கூனம்பட்டி இளவல், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் கோவில் வளாகத்தில் சுற்றியுள்ள திறந்தவெளி அரங்கு அமைக்கப்பட்டது. இதில், திருவாரூர் கும்பகோணம் உள்பட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 25 குழுக்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். சிறுமிகள் முதல் பெரியவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு கலைஞருக்கும் அடையாள எண் வழங்கப்பட்டது. இதன்படி வரிசையாக நிறுத்தப்பட்டு, நாட்டிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மொத்தம் 3 பாடல்கள் பாடப்பட்டன. இந்நிகழ்ச்சியைக் காண ஆயிர த்துக்கும் அதிகமானோர் திரண்டு ரசித்தனர்.பின்னர், நடனம் ஆடிய மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டது

# திருவாரூரில் எடப்பாடி பழனிச்சாமி பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததானம் மற்றும் பொதுமருத்துவ முகாம்

## முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் தலைமையில் நடந்தது



**திருவாரூர்,மே.12-**

அதிமுக பொதுச்செயலாளரும்,சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியின் 71வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று திருவாரூரில் அதிமுகவின் இளைஞர் இளம்பெண்கள் பாசறை,மருத்துவர் அணி, அண்ணா தொழிற்சங்கம்,தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆகியவைகளின் சார்பில் பொதுமருத்துவ முகாம் மற்றும் இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.திருவாரூர் கஸ்தூரிபா காந்தி மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கட்சியின் மாவட்டச் செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான இரா.காமராஜ் எம்எல்ஏ கலந்துகொண்டு முகாமினை தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சிக்கு கட்சியின் அமைப்புச் செயலாளர்கள் கோபால் மற்றும் சிவா.ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இரத்ததானம் மற்றும் மருத்துவ முகாம் ஏற்பாடுகளை மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் எம்.ஆர்.பாலாஜி,மாவட்ட மருத்துவ அணி செயலாளர் சீனிவாசன்,மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் கலியபெருமாள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சின்னராஜ்,மண்டல தலைவர் தியாகராஜன் ஆகியோர் செய்தனர்.

முகமை தொடங்கி வைத்து முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ பேசியதாவது, டெல்டா மாவட்டத்தில் மீத்தேன்,ஹைட்ரோ கார்பன் எடுப்பதை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தடுத்து நிறுத்தினார்.அந்த வழியில் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது காவிரி டெல்டா மண்டலத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்து,இப்பகுதி விவசாயிகளையும்,விவசாயத்தையும் பாதுகாத்தார். அதைப்போல நீட் தேர்வினால் மருத்துவக் கனவு சாதாரண மக்களுக்கு கேள்விக்குறியாகி கொண்டிருந்த நேரத்தில்,நீதிமன்றம் வழக்குகள்,போராட்டங்கள் அன்றாட நிகழ்வுகளாக தொடர்ந்து கொண்டிருந்தன.அந்த நேரத்தில் நீட் தேர்வை நீதிமன்றமும் மத்திய அரசும் தான் முடிவு செய்ய வேண்டும் என்கிற நிலை வந்து விட்டது.நீதிமன்றம் நீட் தேர்வுக்கு ஆதரவான ஒரு உத்தரவை தந்து விட்டது.அதனால் நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு இடைக்கால தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி ஒரு முயற்சியை மேற்கொண்டார்.தான் ஒரு அரசு பள்ளியில் படித்து, இந்த நாட்டினுடைய முதலமைச்சராக உயர்ந்த அந்த எடப்பாடி பழனிச்சாமி, அரசு பள்ளியில் படித்த மாணவச் செல்வங்களுக்கு 7.5 சதவீதம் இட ஒதுக்கட்டை தந்து சாதாரண மக்களை பாதுகாத்தார். இவ்வாறு முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ எம்எல்ஏ பேசினார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ஏ.என்.ஆர்.பன்னீர்செல்வம், நகர செயலாளர் ஆர்.டி.மூர்த்தி,ஒன்றிய செயலாளர் மணிகண்டன்,செந்தில்வேல் மற்றும் அனைத்து நகர,ஒன்றிய கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், மருத்துவர்கள், மருத்துவ குழுவினர்,பொதுமக்கள்,கழக தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இந்த ரத்ததான முகாமில் 300க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது குருதி கொடையினை தானமாக வழங்கினார்கள்.



**அ தி மு க பொதுச்செயலாளர் எடப்பாடி.கே.பழனிச்சாமியின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட செயலாளர் ராமாபுரம் மோகன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் பா.பென்ஜமின் தலைமையில் அதிமுகவினர் ரத்ததானம் செய்தனர். இதில் பகுதி செயலாளர் க.தாமோதரன், வட்ட செயலாளர்கள் கே.பி.வேணுகோபால், மகேந்திரமணி மற்றும் பா.நாகராஜன், விமல்ராஜ் கலந்து கொண்டனர்.**

# நீடாமங்கலம் அருகே முன்னாவல் கோட்டை ஊராட்சியில் பொதுவிநியோக திட்ட சிறப்பு குறைதீர் முகாம்



**நீடாமங்கலம்,மே.12-**

நீடாமங்கலம் அருகே நடந்த முகாமில் குடும்ப அட்டை தொடர்பான பல்வேறு மனுக்களை பொதுமக்கள் அளித்தனர் .தமிழக அரசால் மக்களின் நலன் கருதி பல்வேறு அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது .அந்த வகையில் பொது விநியோக திட்டத்தில் சேவைகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்குவதன் பொருட்டு திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகில் உள்ள முன்னாவல் கோட்டை ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட த்தில் பொதுவிநியோக திட்டம் தொடர்பான சிறப்பு குறைத் தீர் முகாம் நேற்று மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வபாண்டி தலைமையிலும், நீடாமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் ஜெயந்தி, வட்ட பொறியாளர் இளமாறன் முன்னிலையில் பொது விநியோகத் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல் ,திருத்தம் செய்தல், கைபேசி எண் பதிவு, முகவரி மாற்றம் புதிய குடும்ப அட்டை பெறுவது உள்ளிட்ட பொதுமக்களிடம் இருந்து 29 மனுக்கள் பெறப்பட்டு உடனடி தீர்வு காணப்பட்டது .முகாமில் நியாய விலைக் கடை விற்பனையாளர் கருணாநிதி, ஊராட்சி செயலாளர் செந்தில்குமார், திட்ட ஒருங்கிணைப்பாளர் (மக்கள் நலப் பணியாளர்) இளையராஜா ,கணினி உதவியாளர் திலகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் . இந்த முகாம் ஒவ்வொரு மாதமும் அந்தந்த ஊராட்சிகளில் நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# காய்கறி சாகுபடி பணிகள் தோட்டக்கலை அலுவலர் ஆய்வு



**நாகப்பட்டினம்,மே.12-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் சியாத்தமங்கை, அம்பல், போலகம், கொத்தமங்கலம் பகுதிகளில் மாநில தோட்டக்கலைத்துறை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கத்தரி, வெண்டை,புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், தண்டு கீரை, மிளகாய், வாழை உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்து வரும் விவசாய நிலங்களை தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொறுப்பு) முஹமது சாதிக் அறுவுறுத்தலின் பேரில் உதவி தோட்டக்கலை அலுவலர் செல்லபாண்டியன் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில்:- விவசாயிகள் டெல்டா பகுதிகளில் நெல்,பயறு, உளுந்து, பருத்தி உள்ளிட்ட பயிர்களை மட்டுமே சாகுபடி செய்து வருகின்றனர். இதற்கு மாற்று பயிராக கத்தரி, வெண்டை, புடலை, பாகல், மிளகாய், மரவள்ளிக் கிழங்கு சாகுபடியினை சோதனை அடிப்படையில் ஒன்றியத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய அறிவுறுத்தினர். மேலும் காய்கறி சாகுபடிக்கு ஏற்ற உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு பற்றிய அறிவுரைகளையும் வழங்கினார்.

# கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி திருக்கோவிலில் சித்திரை பெருந்திருவிழாவின் திருதேரோட்டம்: ஏராளமானோர் தரிசனம்



**கும்பகோணம்,மே.12-** 108 திவ்ய தேசங்களில் ஸ்ரீ ரங்கம், திருப்பதிக்கு அடுத்து 03வது முக்கிய திவ்ய தேசமாக போற்றப்படும் கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி திருக்கோவிலில் தான் தமிழ் வேதமான 4 ஆயிரம் திவ்ய பிரபந்தம் அரங்கேற்றம் செய்யப்பட்ட புனித தலமாகும்.

திருக்கோவிலில் சித்திரை பெருந்திருவிழாவின் தொடக்கமாக கடந்த 02ம் தேதி கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து நாள்தோறும் பல்வேறு வாகனங்களில் சுவாமி திருவீதியுலா நடைபெற்று விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 09ம் நாளான நேற்று காலை உற்சவர் சாரங்கபாணி சுவாமி ஸ்ரீதேவி பூமி தேவி தாயார்களுடன் திருத்தேருக்கு எழுந்தருளி தேரோட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது இதில் ஏராளமான கலந்து கொண்டு வடம் பிடித்து இழுத்தும் தேரில் பவனி வரும் சுவாமிகளை தரிசனம் செய்தும் வருகின்றனர்.

# சுற்றுலா தளங்களில் லாட்ஜ்களில் 12 மணிநேர கட்டண கொள்ளை: உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழ்நாடு அரசுக்கு சமூக ஆர்வலர் அ.அப்பர்சுந்தரம் கோரிக்கை

**மயிலாடுதுறை,மே.12-** மயிலாடுதுறை சமூக ஆர்வலர் அரசுக்கு கோரிக்கை தமிழ்நாடு முழுவதும் அதிக அளவிலான ஆன்மீகம் மற்றும் கடற்கரை, காடுகள், இயற்கை மலைவாச ஸ்தலங்கள் உள்ளிட்ட சுற்றுலா தளங்கள் ஏராளமாக உள்ளன. ஆண்டு முழுவதும் ஆயிரக்கணக்கானோர் வட இந்தியாவில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் இவ்விடங்களுக்கு வருகை தந்து அங்கே இருக்கும் லாட்ஜ்களில் தங்கி ஓய்வெடுத்து சுற்றுலா தலங்களையும், ஆன்மீக தலங்களையும் கண்டு களித்து வருகிறார்கள். இதனால் பெருமளவில் அப்பகுதியில் உள்ள அனைத்து வணிகமும் மேம்படுகிறது. ஆனால் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் உள்ள லாட்ஜ்கள் நாள்ஒன்றுக்கு 24 மணி நேரம் என்று கணக்கிடாமல், 12 மணி நேர கணக்கீட்டை செய்து சுற்றுலா பயணிகளை ஏமாற்றி பெருமளவில் சம்பாதிக்கிறார்கள். இதனால் சுற்றுலா வரும் பயணிகள் பக்தர்கள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகி பொருளாதார சிக்கலுக்கும் ஆட்பட்டு தவிக்கின்றார்கள். வெளியூரிலிருந்து வருவதால் இதுகுறித்து எங்கு சென்று முறையிடுவது என்று கூட தெரியாமல் புலம்பி திரிக்கிறார்கள். கடந்த நான்கைந்து மாதமாக பல்



வேறு நகரங்கள் இதுகுறித்த புகாரினை என்னிடம் சமூக ஆர்வலர் என்ற முறையில் தெரிவித்தனர் அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கும், அனைத்து மாவட்ட நிர்வாகத்திற்கும் கீழ்காணும் கோரிக்கைகளை பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் சார்பில் முன்வைக்கின்றோம். ஒரு நாள் வாடகை என்பது 24 மணி நேரம் என்பதை உறுதியாக அறிவிக்க வேண்டும்.12 மணி நேரம் என்றால் அரை நாள் வாடகை மட்டுமே பெறறுக் கொள்ளும் சூழலை அரசு அதிகாரிகள் ஏற்படுத்தி தர வேண்டும்.

குறிப்பாக ஊட்டி, கொடைக்கானல் காடு, போன்ற பகுதிகளில் கோடை காலங்களிலும், ஆன்மீகம் சார்ந்து திருக்கடையூர், பழனி, திருச்செந்தூர், வேளாங்கண்ணி, கன்னியாகுமரி போன்ற ஊர்களுக்கு வருகின்ற பக்தர்களிடம் மிக அதிக அளவு கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. ஆகவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து லாட்ஜ் உரிமையாளர்களுக்கும் அரசின் சார்பில் 24 மணி நேரமே ஒரு நாள் என்று கணக்கிடவும் முறையான விதிமுறைகளை பின்பற்றிடஉத்தரவிட வேண்டும். மேலும் அனைத்து லாட்ஜ்களும் அரசுக்கு செலுத்த வேண்டிய தங்கள் விடுதியின் தொழில் வரி உள்பட அனைத்தையும் ஏமாற்றாமல் அரசுக்கு செலுத்துகிறார்களா என்பதையும் சிறப்பு கவனம் செலுத்தி கண்காணிக்க வேண்டும். மகிழ்ச்சிகரமாக சுற்றுலா தளங்களுக்கு வரும் நம் மக்கள் தங்குவதற்கு லாட்ஜ்களால் பெரும் பொருள் செலவு ஏற்படுகிறது. ஆகவே தமிழ்நாட்டில் லாட்ஜ்கள் நடத்தும் பகல் கொள்ளையை தடுத்து நிறுத்தி, லாட்ஜ்களின் தகுதிக்கும் தரத்திற்கும் ஏற்ற வாடகையை நிர்ணயித்து, அதனை அறிவிப்பு பலகைகள் வாயிலாக வெளிப்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்றும் தவறி ழைக்கும் லாட்ஜ்களை கண்டறிந்தால் உடனடியாக பூட்டி சீல் வைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசுக்கு பாதிக்கப்பட்ட சுற்றுலா பயணிகள் சார்பில் சமூக ஆர்வலர் அ.அப்பர்சுந்தரம் கோரிக்கை விடுத்துள்ளார்.



**தஞ்சாவூர்அரசுமருத்துவமனையின்மேம்பாட்டுபணிகள்குறித்துஅமைச்சர்மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கலெக்டர் பிரியங்கா பங்கஜம், முரசொலி எம்பி, எம்எல்ஏக்கள் துரை சந்திரசேகரன், நீலமேகம், மேயர் சண் ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாநகராட்சி ஆணையர் கண்ணன், மருத்துவ கல்லூரி முதல்வர் பாலசுப்பிரமணியன் உள்ளனர்.**

# அபிராமபுரம் பகுதியில் உடல்வலி நிவாரண மாத்திரைகள் விற்ற இருவர் கைது

**சென்னை மே 12-** சென்னை பெருநகர காவல், அபிராமபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் காமராஜர் சாலை, கோவிந்தசாமி பாலத்தின் அருகே கண்காணித்து, அங்கு உடல்வலி நிவாரண மாத்திரைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்து கொண்டிருந்த 2 நபர்களை மடக்கிப் பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

இது குறித்து அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த 1.தீபக் குமார், 2.சுரேஷ், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து உடல் வலி நிவாரண மாத்திரைகள் 270 எண்ணிக்கைகள். 5 சிரிஞ்கள், 1 செல்போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவாக உள்ள மற்றொரு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

**நகை ஏல அறிவிப்பு**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, எண்.320.பி, மெயின் ரோடு, கொள்ளிடம் "முன்னிதேவி பைனான்ஸ்" நகை அடகு கடையில் 23.05.2020 முதல் 02.10.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.537/2025/A-4 உத்தரவுப்படி 15.05.2025 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

**நகை ஏல அறிவிப்பு**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, எண்.7/137.பி, மெயின் ரோடு, கொள்ளிடம் "நரேஷ் சந்த் ஜெயின் பைனான்ஸ்" நகை அடகு கடையில் 16.05.2020 முதல் 07.10.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.535/2025/A-4 உத்தரவுப்படி 15.05.2025 மதியம் 2.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டிடங்கள்

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கோவி.செழியன் அடிக்கல் நாட்டினர்



**தஞ்சாவூர்,மே.12-** தஞ்சாவூர் மாவட்டம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டடங்கள் திறந்து வைத்து, ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் (11.05.2025) அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் , நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி (தஞ்சாவூர்), சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), என்.அசோக்குமார் (பேராவூரணி) தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி (தஞ்சாவூர்), தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கோ.பாலசுப்பிரமணியன் , இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.செல்வகுமார் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.கலைவாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.5.கோடி செலவில் நவீன வசதிகளுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையமும், ரூ.15 இலட்சம் செலவில் மூன்றாம் பாலினத்தவருக்கான பன்னோக்கு சிகிச்சை மையம் மற்றும் ரூ.1.34 கோடி செலவில் 28 படுக்கைகள் கொண்ட கட்டண படுக்கை பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.60 இலட்சம் செலவில் மகர்நோம்பு சாவடி ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.60 இலட்சம் செலவில் கரந்தை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.30 இலட்சம் செலவில் கணபதி நகர் துணை சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.30 இலட்சம் செலவில் செங்கமலை நாச்சியார் துணை சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.30 இலட்சம் செலவில் அருளானந்த நகர் துணை சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம், ரூ.22 இலட்சம் செலவில் மகர்நோம்பு சாவடி ஆரம்ப சுகாதார நிலையம் ஆய்வக கட்டிடம், ரூ.30 இலட்சம் செலவில் அருளானந்த நகர் நகர்புற துணை சுகாதார நிலையம் கட்டடம், ரூ.30 இலட்சம் செலவில் முனியாண்டவர் நகர் நகர்புற துணை சுகாதார நிலையம் கட்டடம், ரூ.61.72 இலட்சம் செலவில் நடுக்காவேரி வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.39.68 இலட்சம் செலவில் ஆலக்குடி துணை சுகாதார நிலையம் கட்டடம், ரூ.39.68 இலட்சம் செலவில் சித்திரக்குடி துணை சுகாதார நிலையம் கட்டடம், ரூ.40.32 இலட்சம் செலவில் மணக்கரம்பை துணை சுகாதார நிலையம் கட்டடம், ரூ.60 இலட்சம் செலவில் காசவளநாடுபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் என மொத்தம் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, காணொலிக் காட்சி வாயிலாக ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் இளங்காடு துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் செங்கிப்பட்டி துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கல்யாணபுரம் துணை சுகாதார நிலையம், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் அழகிநாயகிபுரம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் இடையாத்தி துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் ஒட்டங்காடு துணை சுகாதார நிலையம், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் பெரியக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஏனாதி ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கீழக்குறிச்சி துணை சுகாதார நிலையம், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வல்லம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கோணுலாம்பள்ளம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் முருக்கங்குடி வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் திருவோணம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம் என மொத்தம் ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டடங்கள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 65.80 கோடி மதிப்பில் 80 கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மருந்தாக்கியல் துறைக் கட்டிடம் ரூ.46 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஒருங்கிணைந்த புற்று நோய் சிகிச்சை மையம் ரூ.23.75 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு, ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திறன் மையம் (Skill Centre), ரூ.33.50 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆயுர்வேத சிகிச்சை கட்டிடம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வல்லம் ஆரம்ப சுகாதார நிலையம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கபிஸ்தளம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் துகிலி ஆரம்ப சுதகாதார நிலைய கூடுதல் கட்டிடம், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சேரல் துணை சுகாதார நிலையம் போன்ற பல்வேறு மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை கட்டடப் பணிகள் ரூ.108.08 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. விரைவில் கட்டடப் பணிகள் முடிவுற்று திறக்கப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இதயம் காப்போம், சிறுநீரகம் பாது காப்பு திட்டம், பாதம் பாது காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தஞ்சாவூரில் மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்தப்பட்டு வருகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டடங்கள் திறந்து வைத்து, ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டடங்கள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மக்களுக்கு பெரும்பங்கு வகிக்கிறது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் இந்தியாவில் தமிழ்நாடு தான் சிறந்து விளங்குகிறது. கல்வித் துறையில் இல்லம் தேடி கல்வி போல் மருத்துவத் துறையில் மக்களைத் தேடி மருத்துவம் போன்ற சிறப்பான திட்டமாகும். இதுபோன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனை மனதில் கொண்டு செயல்படுத்தி வருகிறார் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ,

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உடலியல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வு துறை மூலம் ரூ.2.37 இலட்சம் மதிப்பிலான செயற்கை கால்கள் 4 பயனாளிகளுக்கும், ஏழைத் தாய்மார்களுக்கு சத்துணவு பெட்டகமும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் க.கண்ணன், மாநகர நல அலுவலர் மரு.நமச்சிவாயம், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் (கட்டடம்) நாகவேல், வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, மருத்துவ கண்காணிப்பாளர் மரு.க.ராமசாமி, நிலைய மருத்துவ அலுவலர் மரு.அ.செல்வம், உதவி நிலைய மருத்துவ அலுவலர்கள் மரு.கு.ஹா.முகமது இத்ரீஸ், மரு.அ.முத்து மகேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தஞ்சாவூர் அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் கடந்த 24.04.2025 அன்று குளிரூட்டும் இயந்திரத்தில் மின்கசிவினால் ஏற்பட்ட தீ விபத்து பகுதியினை பார்வையிட்டு மருத்துவமனையின் மேம்பாட்டுப் பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

# தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களுக்கு அரசு மானியமாக ரூ. 33 கோடி வழங்கப்பட்டுள்ளது

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,மே.12** இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு (11.05.2025) கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கோடு அருள்மிகு மகாதேவர் திருக்கோயில் மற்றும் மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து 1000 ஆண்டு பழமையான பத்மநாபபுரம் அருள்மிகு நீலகண்ட சுவாமி திருக்கோயிலில் ரூ. 1.93 கோடி மதிப்பீட்டிலான 9 திருப்பணிகளையும்,, இரணியலில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த அரண்மனையை ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்திடும் வகையிலான திருப்பணிகளையும். சுசீந்தரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் திருக்குளம் சீரமைத்தல் மற்றும் கருங்கல் தரைதளம் அமைக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, திருவிதாங்கூர் தேவஸ்தானத்திலிருந்து பிரிந்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைந்த 490 திருக்கோயில்களுக்கு வரப்பெறுகின்ற வருமானம் என்பது மிக குறைந்த நிலையில் இருந்தபடியால் இத்திருக்கோயில்களில் பணிபுரிகின்ற பணியாளர்கள் ஊதியம் வழங்குதல் மற்றும் திருக்கோயில்களின் திருப்பணிகள் அனைத்திற்கும் நிதி பற்றாக்குறை பெரும் கேள்வியாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, துறையின் அமைச்சர் என்ற வகையில் 2021 ஆம் ஆண்டிலிருந்து 10 முறைக்கும் மேலாக கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் திருப்பணிகளை பார்வையிடுவதற்கும், பல்வேறு புதிய திருப்பணிகளையும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையிலான பணிகளையும் தொடங்கி வைப்பதற்கும் வருகை தந்துள்ளேன். இந்த மாவட்டத்தின் அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்களும், முன்னாள் அமைச்சரும், வாரியத் தலைவருமான திரு. சுரேஷ்ராஜன் அவர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கைளை ஏற்று பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது கன்னியாகுமரி மாவட்ட 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக வழங்கப்பட்ட அரசு மானியம் ரூ. 3 கோடியாக இருந்தது. அதனை படிப்படியாக உயர்த்தி கடந்த ஆண்டு வரை இத்திருக்கோயில்களுக்கு ரூ.33 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களுக்கான அரசு மானியத்தை ரூ. 18 கோடியாக உயர்த்தியுள்ளார். மேலும் இம்மாவட்டத்தில் 2022 - 2023 மற்றும் 2023 -2024 ஆம் நிதியாண்டுகளில் தலா 100 திருக்கோயில்களுக்கும், 2024 -2025 ஆம் நிதியாண்டில் 50 திருக்கோயில்களுக்கும் என மொத்தம் ரூ.44 கோடி மதிப்பீட்டில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, அதில் 87 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன. இந்த ஆட்சியானது ஒரு ஆன்மீக ஆட்சி என்பதை நிரூபிக்கின்ற வகையில் கன்னியாகுமரியில் மென்மேலும் இது போன்ற திருப்பணிகளும், குடமுழுக்குகளும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் மருதமலையில் 184 அடி உயரத்திலும், ஈரோடு மாவட்டம், திண்டலில் 180 அடி உயரத்திலும், இராணிப்பேட்டை மாவட்டம், குமரகிரி திமிரியில் 114 அடி உயரத்திலும் முருகன் சிலைகள் அமைக்கப்பட உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று, இப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளை ஏற்படுத்தி தரும் வகையில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் 19 திருக்கோயில்களில் ரூ. 1,770 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்செந்தூரில் HCL நிறுவனத்தின் சார்பில் 200 கோடி ரூபாய்க்கு மேலாகவும், திருக்கோயில் சார்பில் 100 கோடி ரூபாய்க்கு மேலாகவும் திருப்பணி நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முழுமையாக நிறைவு பெறுகின்ற போது பக்தர்களுக்கு தேவையான கூடுதல் வசதிகள் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற அளவிற்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திகழும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர். அழகுமீனா, தமிழ்நாடு உணவு ஆணையத் தலைவர் என். சுரேஷ்ராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பர்ட், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், சார் ஆட்சியர் வினய் குமார் மீனா, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் பி.கவிதா பிரியதர்சினி, என். பழனிகுமார், உதவி ஆணையர் தங்கம் உள்ளாட்சி அமைப்புகளின் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## முத்தரப்பு மகளிர் கிரிக்கெட்:
# இந்திய அணி சாம்பியன்




**கொழும்பு, மே 12-**
முத்தரப்பு மகளிர் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் இந்திய அணி 97 ரன்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

**3 நாட்டுகள் பங்கேற்பு...**
இந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய 3 நாட்டு மகளிர் அணிகள் இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இலங்கை தலைநகர் கொழும்புவில் நடைபெற்றது. இதில் லீக் சுற்று முடிவில் இந்தியா 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதலிடமும், இலங்கை 2 வெற்றி, 2 தோல்வியுடன் 4 புள்ளிகளை சொந்தமாக்கி 2-வது இடமும் பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறின. தென் ஆப்பிரிக்கா ஒரு வெற்றி, 3 தோல்வியுடன் (2 புள்ளி) கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டு வெளியேறியது.

**இறுதிப்போட்டியில்...**
இந்த நிலையில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 342 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக மந்தனா 116 ரன்களும், ஹர்லீன் டியோல் 47 ரன்களும் அடித்தனர். இலங்கை தரப்பில் மல்கி மதாரா, விஹாங்கா மற்றும் சுகன்திகா குமாரி தலா 2 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

**343 ரன்கள் இலக்கு...**
பின்னர் 343 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி தொடக்கம் முதலே இந்திய பந்துவீச்சில் தடுமாறியது. தொடக்க வீராங்கனையான ஹாசினி பெரேரா டக் அவுட் ஆகி ஏமாற்றினர். பின்னர் களமிறங்கிய வீரர்களில் விஷ்மி குணரத்னே (36 ரன்கள்), கேப்டன் சமாரி அத்தபத்து (51 ரன்கள்), நிகாஷி டி சில்வா (48 ரன்கள்) தவிர வேறுயாரும் நிலைக்கவில்லை.

**சாம்பியன் பட்டம்...**
48.2 ஓவர்கள் தாக்குப்பிடித்த இலங்கை அணி 245 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 97 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இந்திய தரப்பில் ஸ்னே ராணா 4 விக்கெட்டுகளும், அமன்ஜோத் கவுர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தி வெற்றியில் முக்கிய பங்காற்றினர்.

## ஐ.பி.எல். தொடரில் மீண்டும்
# ஆஸி. வீரர்கள் பங்கேற்பதில் சிக்கல்

**மும்பை, மே 12-**
போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதால் வெளிநாட்டுக்குச் சென்ற வீரர்களை ஐ.பி.எல். அணிகள் மீண்டும் இந்தியாவுக்கு வர அழைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் தொடரில் ஆஸி. வீரர்கள் பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

**தற்காலிக நிறுத்தம்...**
இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போர்ப் பதற்றம் காரணமாக ஐ.பி.எல். தொடர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டதால் ஐ.பி.எல். நிர்வாகம் போட்டிகள் எங்கு நடத்த வேண்டுமென ஆலோசனை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 16 போட்டிகளை சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் நகரங்களில் நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

**மீண்டும் வர அழைப்பு...**
இந்நிலையில், ஐ.பி.எல். அணிகள் வெளிநாட்டுக்குச் சென்ற வீரர்கள், பயிற்சியாளர்களை மீண்டும் இந்தியாவுக்கு வருமாறு அழைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேசமயம் ஐ.பி.எல். போட்டிகள் மே.15ஆம் தேதி முதல் மீண்டும் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆஸி. வீரர்களுக்கு சிக்கல்...**
பாட் கம்மின்ஸ், டிராவிஸ் ஹெட், நாதன் எல்லீஸ் மீண்டும் இந்தியா வருவதில் உறுதியாக இல்லை என தகவல் வெளியாகியுள்ளது. ஏனெனில், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு ஆஸி. அணி தயாராகி வருகிறது. ஐ.பி.எல். போட்டியில் சன்ரைசர்ஸ், சிஎஸ்கே அணிகள் பிளே ஆஃப்-க்கு தேர்வாகவில்லை. அதனால் அதில் இருக்கும் வீரர்கள் இந்தியாவுக்கு வருவதில் சந்தேகம் எனக் கூறப்பட்டுள்ளது.

# ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதி திடீர் துப்பாக்கிச்சூடு: இந்திய வீரர் காயம்

**ஜம்மு, மே 12-**
ஜம்மு - காஷ்மீர் எல்லையில் ஊடுருவ முயன்ற பயங்கரவாதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய வீரர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வரும் மோதலை நிறுத்த இரு நாடுகளும் சனிக்கிழமை மாலை பரஸ்பரம் ஒப்புக் கொண்டது. ஆனால், எல்லையில் போர் நிறுத்த உறுதியை மீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்துவதற்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கண்டனம் தெரிவித்திருந்தார். மேலும், பாகிஸ்தானுக்கு முழுவீச்சில் பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

இந்த நிலையில், ஜம்மு - காஷ்மீர் எல்லையில் நக்ரோட்டா ராணுவ நிலையம் அருகே மர்ம நபர் ஒருவர் ஊடுருவ முயற்சித்ததாக வொயிட் நைட் கார்ப்ஸ் ராணுவ பிரிவினர் தெரிவித்துள்ளனர். அந்த மர்ம நபருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இந்திய வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து, இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற மர்ம நபரை ராணுவ வீரர்கள் தேடி வருகின்றனர்.

## உயிரிழந்த ராணுவ வீரர் குடும்பத்திற்கு
# சொந்த நிதியில் ரூ.25 லட்சம் வழங்கினார் பவன்கல்யாண்




**அமராவதி, மே 12-**
பாகிஸ்தானின் தாக்குதலின் போது உயிரிழந்த ராணுவ வீரர் முரளி நாயக் குடும்பத்திற்கு பவன் கல்யாண் தனது சொந்த நிதியில் இருந்து ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்தது. இதற்கு ஆபரேசன் சிந்தூர் என்று இந்திய ராணுவம் பெயரிட்டது.

இதனையடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்பின் தலையீட்டால் இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக சண்டை நிறுத்தத்திற்கு ஒப்பு கொள்வதாக அறிவித்தது. இன்று இருநாடுகளும் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளன.

ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தான் ராணுவம் நடத்திய துப்பாக்கிசூட்டில் ஆந்திராவை சேரந்த முடவத் முரணி நாயக் என்ற ராணுவ வீரர் வீர மரணம் அடைந்தார். இவர் அக்னிவீர் திட்டத்தின் கீழ் ராணுவத்தில் இணைந்தவர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் தாக்குதலின் போது உயிரிழந்த ஆந்திராவைச் சேர்ந்த ராணுவ வீரர் முரளி நாயக்கின் உடலுக்கு ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாண் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும், முரளியின் குடும்பத்திற்கு பவன் கல்யாண் தனது சொந்த நிதியில் இருந்து ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளார்.

## மீண்டும் ஐ.பி.எல். சீசன்
# தொடங்குவது எப்போது? பி.சி.சி.ஐ. விரைவில் முடிவு

**சென்னை, மே 12-**
ஐ.பி.எல். சீசனை மீண்டும் தொடங்குவது குறித்து பி.சி.சி.ஐ. விரைவில் முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒத்திவைப்பு...**
கடந்த சில நாட்களாக பாகிஸ்தான் தரப்பில் ட்ரோன் மற்றும் ஏவுகணைகளை கொண்டு இந்தியாவின் எல்லையோர பகுதிகளில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதை இந்திய வான் பாதுகாப்பு தடுப்பு அமைப்பு இடைமறித்து அழித்தது. போர் பதற்றம் காரணமாக ஐ.பி.எல். சீசன் தற்காலிகமாக ஒரு வார காலத்துக்கு தள்ளிவைக்கப்படுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) அறிவித்தது.

**எதிர்பார்ப்பு...**
இந்நிலையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் ஐ.பி.எல். சீசன் தொடங்குவது எப்போது என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. முன்னதாக, இரு நாடுகளுக்கு இடையிலான பதற்றம் காரணமாக ஒரு வார காலம் 'ஐ.பி.எல். 2025' சீசன் தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டது. தற்போது இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் சூழல் காரணமாக மீண்டும் ஐ.பி.எல். சீசன் தொடங்குவது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விரைவில்...**
இந்நிலையில், மீண்டும் ஐ.பி.எல். சீசனை தொடங்குவது குறித்த அறிவிப்பை விரைவில் பி.சி.சி.ஐ. வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமாக வரும் 12-ம் தேதி இரு நாடுகளுக்கு இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு நடப்பு ஐ.பி.எல். சீசனின் செகண்ட் இன்னிங்ஸ் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இரண்டு ஆட்டங்கள்...**
எஞ்சியுள்ள லீக் ஆட்டங்களை நாள் ஒன்றுக்கு இரண்டு ஆட்டங்கள் என நடத்தி முடிக்கவும், நடப்பு சீசனை இந்த மாதத்துக்குள் முடிக்கவும் பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல். இருப்பினும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பங்கேற்ற வெளிநாட்டு வீரர்கள் தாயகத்துக்கு திரும்பி உள்ளனர். அவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வரும் சவாலும் இதில் அடங்கியுள்ளது.

**வழக்கம் போலவே...**
முன்னதாக, இந்த சீசனில் எஞ்சியுள்ள ஆட்டங்களை தேசத்தின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதியில் உள்ள கிரிக்கெட் மைதானங்களில் நடத்த வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டது. போர் நிறுத்தம் காரணமாக மீண்டும் நாடு முழுவதும் உள்ள மைதானங்களில் ஐ.பி.எல். சீசனை வழக்கம் போலவே நடத்தலாம் என்ற திட்டமும் இருப்பதாக தகவல். எப்படியும் இது குறித்த அப்டேட் அடுத்த சில நாட்களில் தெரிந்துவிடும்.

# ரோகித் சர்மா குறித்து கிளார்க்



இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதாக மே.7ஆம் தேதி அறிவித்தார். இது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கடைசியாக ரோகித் சர்மா பி.ஜி.டி. தொடரில் விளையாடினார். 3-2 என ஆஸ்திரேலியாவுடன் தோல்வியைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவர் குறித்து முன்னாள் ஆஸி. கேப்டன் மைக்கேல் கிளார்க் கூறியதாவது: ரோகித் சர்மா மாதிரியான ஒரு வீரரை எந்த ஒரு அணியும் மிஸ் செய்யாது. ஆனால், புத்திசாலிதனமான ஒரு கேப்டனாக அவரை யாருமே ஈடுசெய்ய முடியாது. ரோகித் சர்மா போட்டியை சிறப்பாக கவனிப்பார் என்றார். ரோகித் சர்மாவுக்குப் பதிலாக கே.எல்.ராகுலை தொடக்க வீரராக களமிறக்கலாம். ஆனால், கேப்டனாக அவருக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# டி-20 தொடர் நடைபெறுமா?

வங்கதேச அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்த டி20 தொடர் வருகிற மே 25 ஆம் தேதி தொடங்கவுள்ளது. இந்த நிலையில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவுவதால், வங்கதேசம் - பாகிஸ்தான் இடையேயான டி20 தொடர் நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான டி20 தொடர் குறித்து வங்கதேச கிரிக்கெட் வாரியம் தரப்பில் தெரிவித்திருப்பதாவது: வங்கதேச அணி வீரர்களின் பாதுகாப்புக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறோம். வீரர்கள் மற்றும் அணி பயிற்சியாளர்கள் மற்றும் உதவியாளர்களின் பாதுகாப்பு எங்களுக்கு மிகவும் முக்கியம். பாகிஸ்தானுக்கு எதிரான டி20 தொடர் குறித்து, அந்நாட்டு கிரிக்கெட் வாரியத்துடன் ஆலோசனை செய்த பிறகே முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சச்சின் அன்னையர் தின வாழ்த்து

இந்திய அணியின் முன்னாள் வீரரான சச்சின் டெண்டுல்கர் அவரது அம்மா ரஜ்னி டெண்டுல்கருக்கு அன்னையர் தின வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவரது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: நான் தொடங்கும் அனைத்து விஷயங்களும் என்னுடைய அம்மாவின் பிரார்த்தனையுடனும், அவரது வலிமையுடனும் தொடங்கப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் அவர்களது அம்மா பக்கபலமாக இருப்பது போன்று என்னுடைய அம்மாவும் எனக்கு எப்போதும் ஊக்கம் அளிப்பவராக இருந்துள்ளார். நம்பமுடியாத அளவுக்கு குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கும் அம்மாக்கள் அனைவருக்கும் எனது அன்னையர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் எனப் பதிவிட்டுள்ளார்.

# ரொனால்டோ சாதனையை முறியடிப்பு

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி தற்போது இன்டர் மியாமி அணிக்காக விளையாடி வருகிறார். மினசோட்டாவில் அலையன்ஸ் பீல்ட் திடலில் நடைபெற்ற போட்டியில் இன்டர் மியாமி, மினசோட்டா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் மெஸ்ஸி 48-ஆவது நிமிஷத்தில் அசத்தலான கோல் அடித்தார். இந்த கோலின் மூலமாக தனது 860-ஆவது கோலை நிறைவு செய்தார்.

இந்தப் போட்டியில் இன்டர் மியாமி 1- 4 என தோல்வியுற்றது. இருப்பினும் மெஸ்ஸி அடித்த கோல் வரலாற்றுச் சாதனையாக மாறியிருக்கிறது. கால்பந்து தொடரில் அதிகமான கோல்கள் (934) அடித்துள்ள கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது 860ஆவது கோலை கடந்த 2023ஆம் ஆண்டு அல்நசீர் அணிக்காக அக்.1ஆம் தேதி அடித்தார். இந்த கோல் அவரது 38ஆவது வயதில் 1,189ஆவது போட்டியில் அடித்திருந்தார். லியோனல் மெஸ்ஸி தனது 860-ஆவது கோலை 37 வயதில் 1,098ஆவது போட்டியிலேயே அடித்து ரொனால்டோ சாதனையை முறியடித்துள்ளார்.

# சபலென்கா போராடி வெற்றி

ரோம் நகரில் நடைபெற்று வரும் இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில் நம்பர் 1 வீராங்கனையான அரினா சபலென்கா (பெலாரஸ்), சோபிய கெனின் (அமெரிக்கா) உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை சோபியா கெனின் கைப்பற்றி சபலென்காவுக்கு அதிர்ச்சி அளித்தார். பின்னர் சுதாரித்து கொண்டு விளையாடிய சபலென்கா அடுத்த 2 செட்டுகளை போராடி கைப்பற்றி வெற்றி பெற்றார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் சபலென்கா 3-6, 6-3 மற்றும் 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இவர் 4-வது சுற்றில் மார்டா கோஸ்ட்யுக் உடன் மோத உள்ளார்.

# பத்மஸ்ரீ விருது பெற்ற விஞ்ஞானி காவிரி ஆற்றில் சடலமாக மீட்பு



**மாண்டியா, மே 12-**
பத்மஸ்ரீ விருது பெற்ற விஞ்ஞானி காவிரி ஆற்றில் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுபற்றிய விவரம் வருமாறு; கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் சுப்பண்ணா அய்யப்பன் (70). வேளாண் விஞ்ஞானியான இவருக்கு 2022ம் பத்மஸ்ரீ விருது வழங்கி மத்திய அரசு கவுரவித்தது. மைசூரு விஸ்வேவரய்யா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

மே 7ம் தேதி முதல் சுப்பண்ணா அய்யப்பன் காணாமல் போய்விட்டதாக போலீசில் புகார் அளிக்கப்பட்டது. வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந் நிலையில் மாண்டியாவில் உள்ள காவிரி ஆற்றில் அவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். சுப்பண்ணா அய்யப்பன் சடலத்தை போலீசார் மீட்டு விசாரணையில் இறங்கி உள்ளனர். முதல்கட்ட விசாரணையில் சுப்பண்ணா அய்யப்பன் தற்கொலை செய்து கொண்டதாக தெரிய வந்துள்ளது. ஆனால் தற்கொலைக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய டெஸ்ட் அணியில் சாய் சுதர்சனுக்கு வாய்ப்பு?

**மும்பை, மே 12-**
இந்திய டெஸ்ட் அணியில் சாய் சுதர்ஷனுக்கு தொடக்க வீரராக களமிறங்க வாய்ப்பு கிடைக்குமா என ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

**அதிக ரன்கள்...**
தமிழகத்தைச் சேர்ந்த சாய் சுதர்சன் (23) குஜராத் டைட்டன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். நடப்பு ஐ.பி.எல். சீசனில் மட்டும் சாய் சுதர்சன் 509 ரன்களை குவித்து அதிக ரன்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். இந்த ஐ.பி.எல். சீசனில் முதல்முறையாக 500 ரன்களை எடுத்தவர் என்ற சாதனையை நிகழ்த்திய சாய் சுதர்சன் குறைவான போட்டிகளில் 1500 ரன்களைக் கடந்த சச்சின் சாதனையையும் முறியடித்தார்.

**டெஸ்ட் அணியில்...**
ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுக்காக கடந்த 2023ஆம் ஆண்டு அறிமுகமானார். 3 போட்டிகளில் 127 ரன்கள் அடித்துள்ளார். தற்போது, டெஸ்ட்டில் இருந்து ரோஹித் சர்மா ஓய்வு பெற்றதால் தொடக்க வீரருக்கான இடம் காலியாக இருக்கிறது. ஐ.பி.எல். தொடரில் அற்புதமாக விளையாடிக்கொண்டுள்ள சாய் சுதர்சனை தொடக்க வீரராக தேர்வு செய்யாலாம் என பலரும் கருத்து தெரிவித்து வருகிறார்கள். லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் 28 போட்டிகளில் 1,396 ரன்கள் எடுத்துள்ளார். சராசரி 60.69ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்துடன் இந்திய அணி ஜூனில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கிறது.

# போரால் ஆயுத வியாபாரிகளுக்கு மட்டுமே லாபம்: திருமாவளவன்

**சென்னை, மே 12-**
போர் என்பது ஆயுத வியாபாரிகளுக்கு மட்டுமே லாபம் தரும் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே நடைபெற்றுவந்த போர் நிறுத்தப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். பயங்கரவாதத்தை எதிர்கொள்வது குறித்து இரண்டு நாடுகளும் பேசித் தீர்வு காண வேண்டும். காஷ்மீரிலுள்ள பஹல்காமில் 26 பேரை பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே போர் வெடித்தது. அது மேலும் விரிவடையக்கூடாது; போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என இரண்டு நாடுகளைச் சேர்ந்த ஜனநாயக சக்திகள் வலியுறுத்தி வந்தன.

போரை நிறுத்துவதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் மார்கோ ரூபியோ இரு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களோடும், பாகிஸ்தான் ராணுவத் தளபதியிடமும் பேசினார். அமெரிக்கா மேற்கொண்ட சமரசத்தின் விளைவாகவே இந்தப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் சமரசமோ அல்லது இரு நாடுகளின் சுயமான முடிவோ எப்படியாயினும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பது ஆறுதல் அளிக்கிறது. இதனை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வரவேற்கிறது.

போர் என்பது ஆயுத வியாபாரிகளுக்கு மட்டுமே லாபம் தரும். அதனால் பொதுமக்கள் ஒருபோதும் பயனடைவதில்லை. எனவே, மீண்டும் போர் வெடித்துவிடாமல் பார்த்துக்கொள்வதோடு, பயங்கரவாதத்தை முற்றாக அழித்தொழிப்பதற்கு உலக அளவில் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றித் தீர்வுகாண வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா 'ஏ' அணியில் கருண் நாயர் உள்ளிட்ட 5 வீரர்களுக்கு வாய்ப்பு?

**மும்பை, மே 12-**
இங்கிலாந்து தொடருக்கான இந்தியா ஏ அணியில் கருண் நாயர்

உள்ளிட்ட 5 வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

**டெஸ்ட் தொடர்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற ஜூன் 20-ம் தேதி தொடங்க உள்ளது. 2025-2027 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறும் இந்த தொடரில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**இந்திய ஏ அணி...**
இந்த தொடருக்கு முன்னதாக இந்திய ஏ அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து லயன்சுக்கு எதிராக 2 டெஸ்ட் (4 நாட்கள்) போட்டிகளிலும், இந்திய அணிக்கெதிராக ஒரு போட்டியிலும் விளையாட உள்ளது. இந்த தொடர் மே 30-ம் தேதி தொடங்க உள்ளது.

**கருண் நாயருக்கு வாய்ப்பு?**
இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய ஏ அணி வரும் 13-ம் தேதி அறிவிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த அணியில் அபிமன்யூ ஈஸ்வரன், கருண் நாயர், தனுஷ் கோட்டியான், பாபா இந்திரஜித், ஆகாஷ் தீப் உள்ளிட்ட 5 வீரர்கள் இடம்பெற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இங்கிலாந்து லயன்சுக்கு எதிராக அசத்தும் பட்சத்தில் இதில் சில வீரர்கள் நிச்சயம் இந்திய அணியில் இடம் பிடிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## வளசரவாக்கத்தில் தீ விபத்து:
# தம்பதியினர் 2 பேர் பலி

**சென்னை, மே 12-**
சென்னை வளசரவாக்கம் பகுதியில் உள்ள பங்களா வீட்டில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி தம்பதியினர் 2 பேர் பலியாகினர்.

சென்னை வளசரவாக்கம் சவுத்ரி நகரில் ஆடிட்டர் ஸ்ரீராமுக்கு சொந்தமான பங்களா வீட்டில் ஞாயிற்றுக்கிழமை பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து அருகில் இருந்தோர் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலை அடுத்து 3 தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த 30-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவர பல மணி நேரமாக போராடி வருகின்றனர். தீ விபத்தால் அப்பகுதி முழுவதும் கரும் புகை சூழ்ந்து காணப்படுகிறது.

இந்த தீ விபத்தில் நடராஜன் மற்றும் அவரது மனைவி தங்கம் உடல் கருகி பலியாகினர். ஸ்ரீராம் மீட்கப்பட்டுள்ளார். வீட்டின் முதல் தளத்தில் இருந்து குதித்த பணிப்பெண் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தீ விபத்து குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 12.05.2025 முதல் 18.05.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்விணி --

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு பணி புரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

பரணி --

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் எனப் பொழுது இனிமையாக கழியும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாத தாகும். பூஜா வழிபாடுகளால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். மக்கள் சேவையில் ஈடுபடுவது காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்கள் புகுத்தி ஆதாயம் காண்பர். சிலருக்கு பணி நிமித்தமாக வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மதிப்பு மிக்க மனிதர்களின் நட்பால் அரசுப் பணியாளர்களின் ஆசைகள் நிறைவேறும். பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

ரோகிணி –

இந்த வாரம் தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்கள் தடபுடலாக நடக்கும். உறவுகளுடன் சென்று மகான்களைத் தரிசனம் செய்து மகிழ்வீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். பிராயணங்கள் மூலமாகப் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றங்காண முயல்வீர்கள். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகள் கையாள்வீர்கள். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராவர். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வு ஏற்படும். அரசுவகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் ஆரம்பத்தில், சுபச் செய்திகளைக் கேட்டு மகிழ்வீர்கள். பக்தி மார்க்கத்தில் மனம் செல்வதால் உற்சாகம் பெருகும். குடும்பத்தோடு கோவில், குளம், புண்ணிய ஸ்தல யாத்திரைகள் என சென்று மகிழ்வீர்கள். தொழிலில் புதிய முதலீடுகளால் உற்பத்தி திறன் அதிகரித்து இலாபம் பெருகும். புத்தக வெளியீட்டாளர் களுக்கு தங்கள் தொழிலில் ஏற்றமான காலம். பெரியவர்கள் ஆசிகள், ஆதரவு ஆகியவை எப்போதும் இருக்கும். கற்பனை வளம் பெருகும். வார மத்தியில் நண்பர்கள் சகவாசத்தால் மனம் தீய வழி முறைகளை நாடும். எனவே, கவனம் தேவை. சிலர், தேவையற்ற காரணங்களால் அரசுக்கு அபராதம் செலுத்த நேரலாம்.

திருவாதிரை ---

இந்த வாரம் உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊக்கம் ஏற்படும். சுறுசுறுப்பாக பணிபுரிந்து இலக்கை எட்டுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் நட்பு ஏற்படும். இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உட்கொள்ளவும் நேரம் இருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். தொலை தூரப் பயணங்களால் நன்மை ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் விபத்தில் சிக்க நேரிடலாம். கவனம் தேவை.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும்.

பூசம் --

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும் ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செல்வாக்கு மிக்க நபர்களின் உதவிகள் மூலம் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும் தொழில் சிறக்கும். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் ஏற்படும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும்.

பூரம் –

இந்த வாரம் சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் தந்தை வழி உறவுகள் உதவி செய்வார்கள். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தர்ம காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்.

அஸ்தம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்ட பின் அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு ஓரளவு பணவரவு இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும்.

சுவாதி –

இந்த வாரம் ஆரவாரம் மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும்.

அனுஷம் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது. அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

கேட்டை –

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

பூராடம் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

திருவோணம் -

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

சதயம்-

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

ரேவதி-

இந்த வாரம் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. உடல் உபாதைகள் காரணமாகத் தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து, அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவீர்கள். தீய குணம் உள்ள நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது. புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம்.



● தஞ்சாவூரில் ரூ.11.82 கோடியில் 16 இடங்களில் புதிய மருத்துவ கட்டிடங்களை நேற்று அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கோவி.செழியன் திறந்து வைத்து ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய மருத்துவ கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினர்.

# தஞ்சாவூரில் புதிய மருத்துவ கட்டிடங்கள்: தமிழக அமைச்சர்கள் திறந்து வைத்தனர்

தஞ்சாவூர், மே 12-

தஞ்சாவூரில் ரூ.11.82 கோடி மதிப்பில் 16 புதிய மருத்துவ கட்டிடங்களை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கோவி செழியன் திறந்து வைத்தனர்.

தஞ்சாவூரில் தமிழ்நாடு அரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.11.82 கோடி மதிப்பில் 16 புதிய மருத்துவ கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் ரூ.7.45 கோடி மதிப்பில் 13 புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் ஆகியோர் கலந்துகொண்டு புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும், புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல்லும் நாட்டினர்.

விழாவில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது :- புற்றுநோய், இதய நோய் உள்ளிட்ட நோய்கள் அதிகரித்து வருவதால் வருமுன் காக்கும் விதமாக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை மையம் ரூ. 5 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் வருகை இரு மடங்குகளாக அதிகரித்துள்ளது. அரசு மருத்துவமனைகள் மீது மக்களிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளதே இதற்கு காரணம்.

உயர் வருவாய் பிரிவினரும் அரசு மருத்துவமனைக்கு வர வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் இதுவரை திருச்சி, தஞ்சாவூர், சேலம் உள்பட 13 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் கட்டண சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதுபோல மேலும் 9 மாவட்டங்களில் கட்டண சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஆண்டுக்கு ஏறத்தாழ 9.50 லட்சம் பிரசவங்கள் நடைபெறுகின்றன. இதில் ஏறக்குறைய 50 ஆயிரம் குழந்தைகள் எடை குறைவாக பிறக்கின்றன. இக்குழந்தைகளைக் கண்காணித்து, பராமரிப்பதற்காக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தவுள்ளது.

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்காக தனி சிகிச்சை பிரிவு திறக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 65.80 கோடி மதிப்பில் 80 கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ 23.75 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட சிகிச்சை பிரிவை தமிழக முதல்வர் தஞ்சாவூருக்கு அடுத்த மாதம் வருகை தரும் போது திறக்கவுள்ளார். அரசு ராசாமி மிராசுதாரர் மருத்துவமனை மேலும் மேம்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயத்துக்கு நிச்சயம் பாதுகாப்பு வழங்குவோம்

## அமைச்சர் ரகுபதி பேட்டி

சென்னை, மே 12-

ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயத்துக்கு பாதுகாப்பு தேவைப்பட்டால் நிச்சயம் வழங்குவோம். உண்மையைச் சொல்ல வருகிறவர்களை இந்த அரசு பாதுகாக்கும் என அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் அவர் அளித்த பேட்டி: அ.தி.மு.க. தான் ரகுபதிக்கு அமைச்சர் பதவி வழங்கியது என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறார். அ.தி.மு.க.வில் நான் இருந்தபோது எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் விசுவாசமாகத் தான் இருந்தேன். ஜெயலலிதாவை பொதுச்செயலராக ஆக்கியது நாங்கள் தான். இரவு, பகல் பாராது உழைத்திருக்கிறோம்.

அந்த உழைப்புக்காகத் தான் எனக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. நாங்கள் உறங்கவில்லை. அன்றைக்கும் விழித்திருக்கிறோம். இன்றைக்கும் விழித்திருக்கிறோம். ஆனால், எடப்பாடிபழனிசாமி தான் எல்லாவற்றையும் மறந்துவிட்டு தூங்கிக் கொண்டிருக்கிறார்.

மணல் எடுப்பது குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின்படி செயல்படுவோம். எம். சாண்ட், ஜல்லி போன்றவற்றின் விலைகள் ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 4 ஆயிரமாகக் குறைக்கச் செய்திருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் நீதிமன்றத்தில் காணொலிக் காட்சி மூலமாக ஆஜராகி வாக்குமூலம் வழங்கலாம். அவருக்கு பாதுகாப்பு தேவைப்பட்டால் நிச்சயம் வழங்குவோம். உண்மையைச் சொல்ல வருகிறவர்களை இந்த அரசு பாதுகாக்கும்.

தமிழ்நாட்டில் இருப்பவர்கள், இந்தியாவில் இருப்பவர்கள் யாரும் பாகிஸ்தானை ஆதரிக்கவே மாட்டார்கள். அப்படி ஆதரிப்பவர்கள் இந்தியர்கள் அல்லர். தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் கைகளில் பணப்புழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். வேறெந்த மாநிலத்திலும் இதுபோன்ற திட்டங்கள் இல்லை.

திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாம் பாகம் குறித்து முதல்வர் அறிவித்திருக்கிறார். கடந்த 2021 தேர்தலில் ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை என்று சொன்னார்கள். கட்டம் சரியில்லை என்று சொன்னவர்களின் கட்டம் தான் சரியில்லாமல் போனது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர்:

# பிரதமருக்கு கார்கே, ராகுல் மீண்டும் கடிதம்

புதுடெல்லி, மே 12-

பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க உடனடியாக பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக இருவரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

ராகுல் காந்தி எழுதியுள்ள கடிதத்தில், "பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் மற்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முதலில் அறிவித்த போர் நிறுத்தம் குறித்து மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் விவாதிப்பது மிகவும் முக்கியம்.

இது எதிர்கால சவால்களைச் சந்திப்பதற்கான நமது கூட்டுத் தீர்மானத்தை நிரூபிக்க ஒரு வாய்ப்பாகவும் இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே எழுதியுள்ள கடிதத்தில், ஏப்ரல் 22 அன்று பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதமரிடம் கோரி, தானும் ராகுல் காந்தியும் ஏப்ரல் 28 அன்று எழுதிய கடிதங்களை நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நான்கு நாட்களாக நடைபெற்ற எல்லை தாண்டிய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பிறகு, நிலம், வான் மற்றும் கடல் பகுதிகளில் அனைத்து துப்பாக்கிச் சூடு மற்றும் இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த இந்தியாவும் பாகிஸ்தானும் சனிக்கிழமை ஒரு உடன்பாட்டை எட்டின என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் விவகாரத்தில்

# மற்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்வதை விரும்பவில்லை

## மத்திய அரசு உறுதி

புது டில்லி, மே 12-

பாகிஸ்தான் விவகாரத்தில் எந்தவொரு நாடும் மத்தியஸ்தம் செய்வதை இந்தியா விரும்பவில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா - பாகிஸ்தான் இருதரப்பு மோதலை நிறுத்திக்கொள்வது என இந்தியா - பாகிஸ்தான் இடையே நேற்று முன்தினம் ஒப்புக் கொள்ளப்பட்டது. இரு நாடுகளின் முப்படைகளும் சனிக்கிழமை மாலை 5 மணி முதல் தாக்குதலை நிறுத்திக் கொள்வதென முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும் இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் ஆயுதப் படைகள் ட்ரோன் தாக்குதலை நடத்தின. இதனால், மீண்டும் ஒரு பதற்றச் சூழல் உருவானது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, புதுடெல்லியில் உள்ள தனது இல்லத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் முப்படை தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் பாதுகாப்பு படைத் தலைவர் ஜெனரல் அணில் சவுகான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதனிடையே, பாகிஸ்தான் விவகாரத்தில் எந்தவொரு நாடும் மத்தியஸ்தம் செய்வதை இந்தியா விரும்பவில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் நேற்று மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாடு முதலிடம்

## தமிழக அரசு பெருமிதம்

சென்னை, மே 12-

பொருளாதார வளர்ச்சி, உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை, தொழில் ஒப்பந்தங்கள், மின்னணு ஏற்றுமதி, வேலைவாய்ப்புகளை வழங்குதல் என பலவற்றில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2021-ம் ஆண்டு மே 7-ம் நாள் முதல்வராக பொறுப்பேற்றார். அப்பொழுது கொரோனா தொற்று தமிழ்நாட்டை ஆட்டிப்படைத்தது. உயிர்ப்பலிகள் வாங்கியது. கொரோனா தொற்று ஏற்படும்போது அச்சத்தில் ஒருவருடன் ஒருவர் சந்திப்பதைக் கூடத் தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. முதல்வர் ஸ்டாலின் அச்சம் சிறிதுமின்றி, கரோனா ஒழிப்பில் ஈடுபட்டு மக்களைப் பாதுகாத்த மகத்தான பணிகளை பத்திரிகைகள் பாராட்டின.

### தொழில் ஒப்பந்தங்கள்:

முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொடர் முயற்சிகளால், தொழிற்சாலைகள் புதிது புதிதாகத் தொடங்கப்பட, நம் நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுக்கும் சென்று செய்து கொள்ளப்பட்ட 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஈர்த்துள்ள ரூ.10,27,547 கோடி புதிய முதலீடுகள், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 32.23 லட்சம் வேலைவாய்ப்புகள் காரணமாகத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் எனப் புகழப்படுகிறது. முதல்வரின் இத்தகைய சிறப்பான நடவடிக்கைகளால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் வேறு எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியாக 9.69% வளர்ச்சி கண்டு இந்தியாவில் முதல் மாநிலம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது.

### ஏற்றுமதியில் இருமடங்கு சாதனை:

திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில் 2020-2021-ல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்த ஏற்றுமதி 2024-2025-ல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருமடங்கு உயர்ந்து சாதனை படைத்தது.

### மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்:

மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் மராட்டியம், உத்தரப்பிரதேசம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களைவிட அதிகமாக 14.65 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணுப் பொருள்களை ஏற்றுமதி செய்து இந்தியாவில் முதலிடம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது தமிழ்நாடு.

### வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை:

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அரசுத்துறைகள் மூலமாகவும், தனியார் துறையிலும், வேலைவாய்ப்புகளை வழங்குவதில் திராவிட மாடல் அரசு தனிக்கவனம் செலுத்தியது. அதனால், 2020-2021-இல் 2.9 கோடியாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை 2024-2025-இல் 3.87 கோடியாக உயர்ந்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

### சமூக அளவீடுகளில் முன்னணி மாநிலம்:

திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், கலைஞர் கனவு இல்லம், முதலான புரட்சிகரமான திட்டங்களால் தமிழ்நாடு அபரிமிதமான வளர்ச்சிகளைக் கண்டு இந்திய மாநிலங்களில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

### உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடம்:

உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 26 சதவிகிதமாக இருப்பது 2023-2024-ல் 51.3 சதவிகிதமாக உயர்ந்து தமிழ்நாட்டின் மகத்தான சாதனையை வெளிப்படுத்துகிறது.

### சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு:

முதல்வரின் சீரிய நிர்வாகத் திறன்களால் மாநிலம் எங்கும் பெரிய அளவில் சாதி மோதல்களோ, தொழிற்சாலைகளில் பிரச்சினைகளோ இல்லாமல் கடந்த நான்கு ஆண்டு காலமும் தமிழ்நாட்டில் அமைதி நிலவுவது மாநிலத்தில் நிலையான வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. 2022 ஆகஸ்ட் முதல் இது வரை காவல் நிலைய மரணங்கள் எதுவும் நிகழவில்லை என்பது பாராட்டுக்குரியது. மேலும், பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் 1,00,000 மக்கள் தொகையில் இந்தியாவில் 66.4; ஆனால் தமிழ்நாட்டில் 24 என வெகுவாகக் குறைந்து மகளிர் நலன் பாதுகாக்கப்படுகிறது.

வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பு: 2023-2024-ஆம் ஆண்டுக்கான அவ்தார் நிறுவன ஆய்வில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மிகவும் உகந்த பாதுகாப்பான நகரம் சென்னை எனப் பாராட்டப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதம். இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம், ஏற்றுமதி தயார் நிலையில் தமிழ்நாடு முதலிடம், தோல் பொருள்கள் ஏற்றுமதி மற்றும் ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம், புத்தாக்கத் தொழில்கள் தரவரிசைப் பட்டியலில் 2018-இல் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, 2022 திராவிட மாடல் ஆட்சியில் முதலிடம், பெண் காவல் அதிகாரிகளைக் கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம், இந்திய அளவில் காலணிகள் மற்றும் தோல் பொருள்கள் தயாரிப்பில் தமிழ்நாடு 38 சதவிகிதம் - முதலிடம், அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம், அதிக எண்ணிக்கையில் சதுப்பு நிலங்கள் கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு, வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம், இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் செயல்படும் தொழிற்சாலைகளில் தமிழ்நாடு முதலிடம், இந்தியாவிலேயே அதிக தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம்,

தொழிற்சாலைகளில் பணிபுரியும் அதிக பெண் தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம், அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம். உலகளாவிய திறன் மையங்களில் மும்பை, புனே, ஐதராபாத், பெங்களூரு முதலான நகரங்களை விட சென்னை 24.5 சதவிகித வளர்ச்சியுடன் 94,121 திறன் மையங்கள் கொண்டு இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்கிறது:

# இந்திய விமானப்படை அறிவிப்பு

புதுடெல்லி, மே 12-

இந்தியாவும் பாகிஸ்தானும் ராணுவ மோதலை நிறுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், செயல்பாடுகள் இன்னும் நடந்து வருவதாகவும், ஊகங்களை தவிர்க்குமாறும் இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய விமானப்படையின் அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "ஆபரேஷன் சிந்தூரில் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை இந்திய விமானப் படை துல்லியத்துடனும் தொழில்முறையுடனும் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

தேசிய நோக்கங்களுடன் இணைந்து, விவேகமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செயல்பாடுகள் இன்னும் நடந்து வருவதால், சரியான நேரத்தில் விரிவான விளக்கவுரை வழங்கப்படும்.

ஊகங்கள் மற்றும் சரிபார்க்கப்படாத தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்குமாறு அனைவரையும் இந்திய விமானப்படை கேட்டுக் கொள்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்ரா பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு

# திருவண்ணாமலையில் பக்தர்கள் கூட்டம்

திருவண்ணாமலை,மே12-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலையில் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் 10 நாட்கள் நடைபெறும் சித்திரை வசந்த உற்சவ விழாவானது கடந்த 1-ந்தேதி தொடங்கியது. இதையடுத்து விழா நாட்களில் 1-ந் தேதி முதல் இரவு மண்டகப்படி நிகழ்ச்சி நடைபெற்றது. திருவண்ணாமலையில் மலையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலையார் மலை என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி உள்ள 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர்.

இந்த ஆண்டிற்கான சித்ரா பவுர்ணமி கிரிவலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 8.53 மணிக்கு தொடங்கி இன்று 12-ந்தேதி (திங்கட்கிழமை) இரவு 10.48 மணிக்கு நிறைவடைகிறது. இந்த ஆண்டு சித்ரா பவுர்ணமிக்கு சுமார் 40 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சித்ரா பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முதலே திருவண்ணாமலையில் பக்தர்கள் குவிந்து வருகின்றனர். பக்தர்களின் வசதிக்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் திருவண்ணாமலைக்கு வரும் 9 சாலைகளிலும் 15-க்கும் மேற்பட்ட தற்காலிக பேருந்து நிலையங்களும், 20-க்கும் மேற்பட்ட இடங்களில் கார் பார்க்கிங் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு பகுதிகளில் இருந்து திருவண்ணாமலைக்கு சுமார் 4,533 சிறப்பு பேருந்துகள் 9,342 முறை இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்புக்காக திருவண்ணாமலையில் 344 கண்காணிப்பு கேமராக்கள், 53 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பணியில் 5,197 போலீசார் ஈடுபட்டுள்ளனர். கிரிவலப் பாதையில் 24 மணி நேரமும் இயங்கும் இலவச சுகாதார மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 56 இடங்களில் நிலையான மருத்துவ குழுக்களை மாவட்ட நிர்வாகம் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.